விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஹூ சித்திரை மீ 23-ம் வ | வியாழக்கிழமை | (05 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 08 | ஓசை 46


## பிறட்மனின் கையில் அதிசயக் கருவி

(கொழும்பு)

ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகரும் முன்னாள் சர்வதேச குடும்பத்திட்ட சம்மேளனத்தின் செயலாளருமான பிரட்மன் வீரக்கோன் அண்மையில் இலங்கையின் அடிப்படைக் கல்வி நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட சனத்தொகை தொடர்பான கருத்தரங்கொன்றில் உரையாற்றினார். இக் கருத்தரங்கில் அவரது கையில் கைக்கடக்கமாக வைத்திருந்த கல்குலேட்டர் போன்ற ஒரு கம்பியூட்டர் கருவியே விரிவுரையில் கலந்துகொண்டிருந்தோரைப் பெரிதும் கவர்ந்தது. இந்தக் கருவி ஆண்டு ஆரம்பத்தில் ஐ. நா. ஸ்தாபன குடும்பத்திட்டப் பிரிவினால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். சனத்தொகை அட்டையொன்றில் பெயரிடப்பட்டிருக்கும் அந்தக் கருவி 10 X 6 சென்ரிமீற்றர் அளவினதாகும். இதன் விசேட அம்சம் என்னவெனில், ஒவ்வொரு நிமிடமும் உலக சனத்தெகை எவ்வளவு அதிகரித்துள்ளது என்பதை அறியமுடியும். உலக ஜனத்தொகை மட்டுமல்லாது ஒவ்வொரு (6ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் மூன்று தமிழர் வீடுகள் தீக்கிரை;

## புலிகள் ஆட்சேபம்; சிங்களவர் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை றெயில் நிலையத்துக்கு அருகேயுள்ள தமிழ் மக்களின் குடியிருப்புப்பகுதியில் நேற்றுக்காலை பத்தரை மணிக்கு சில சிங்கள விஷமிகள் புகுந்து மூன்று வீடுகளுக்குத் தீவைத்தனர் மூன்று வீடுகளும் முற்றாக எரிந்து நாசமாகின.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் பெரும்பரபரப்பு ஏற்பட்டது. இங்கு உடனடியாக விரைந்துசென்ற விடுதலைப்புலிகள் உடன் பொலிசாருடன் தொடர்பு கொண்டனர். பொலிசாரும் உடன் நடவடிக்கையிலிறங்கி சந்தேகத்துக்கிடமான சிங்களவர்கள் சிலரைக்கைது செய்து பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

## எம்.பிக்களின்வெளிநாட்டுப் பயணங்கள் மீது கட்டுப்பாடு!

(கொழும்பு)

ஆளும் கட்சி எம். பிக்களும், அமைச்சர்களும் இனிமேல் கண்டபடி வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்வது கட்டுப்படுத்தப்படவுள்ளது.

ஜனாதிபதி, இவர்களின் பயணங்கள் தொடர்பாக ஒரு குழுவை நியமித்துள்ளார். இந்தக் குழுவின் வழிகாட்டு விதிகளுக்கு அமையவே இவர்கள் இனிமேல் தமது வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்ள முடியும்.

மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட இந்த எம். பிக்களும், அமைச்சர்களும் பொதுமக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் எனவும், கூடுதலான நேரத்தைத் தமது தொகுதி மக்களுடன் கழிக்கவேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் நடைபெறும் மாநாடுகள், கூட்டங்களில் பங்குபற்ற இனிமேல் வெளிநாட்டு இலங்கைத் தூதுவர்கள் அழைக்கப்படுவார்கள் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாண - மட்டக்களப்பு இரவு பஸ்சேவை இடைநிறுத்தம்

(மட்டக்களப்பு)

இம்மாதம் 1 ஆம்திகதிமுதல் ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு யாழ்ப்பாணம் இரவு போக்குவரத்துச்சபை பஸ் சேவை நேற்றுடன் நிறுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு டிப்போவிலிருந்து இம்மாதம் முதலாம் திகதி பஸ் புறப்பட்டு இங்கு வந்தது.

வடபிராந்திய போக்குவரத்துச்சபை இந்தஇரவு பஸ் சேவையை நடாத்த முன்வராததால் இச்சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

## பிரபாகரன் படத்திற்கு தெற்கில் கிராக்கி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனின் புகைப்படங்களுக்கு சிங்கள மக்கள் மத்தியில் பெரும் வரவேற்புப் பெற்றுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சென்ற ஓர் பத்திரிகையாளர் பிரபாகரனின்படம் அச்சிடப்பட்ட கையடக்கமான சிறு கலண்டர் ஒன்றைக் கொண்டு சென்றார். அவர் கொழும்பு செல்லும் வழியில் ஆனைமடுவில் தங்கியபோது அக்கலண்டரைப் பார்த்த ஓர் சிங்களவர் 150 ரூபா தருவதாகச் சொன்னாராம். பின்னர் கொழும்பில் பத்திரிகையாளர் பத்திரிகை நிர்வாகம் ஒன்றிற்குச் சென்றபோது 500-ரூபா தருவதாக விலை பேசப்பட்டதாம்.

## பாராளுமன்றக் கூட்டத்தொடரை எதிர்க்கட்சிகள் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

இரண்டாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ நேற்றுக் காலை 9-50 மணிக்கு சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைந்தார்.

பாராளுமன்ற வாசலில் சபாநாயகர், பாராளுமன் செயலாளர் நாயகம் ஆகியோர் ஜனாதிபதியை வரவேற்று அழைத்துச் சென்றனர்.

இந்த வைபவத்துக்கு வந்த ஜனாதிபதிக்கு இருபத்தொரு பீரங்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டு, முப்படையினரும் அணிவகுப்பு மரியாதை செலுத்தினர்.

ஜனாதிபதியின் பாராளுமன்ற கூட்டத்தொடர் நிகழ்ச்சிகளில் ஐக்கிய தேசியக்கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஈரோஸ் இயக்க சுயேட்சை உறுப்பினர்கள் மாத்திரமே

(6ஆம் பக்கம் பார்க்க)

## துரிதகதியில் புனர்வாழ்வு; புனரமைப்புத் திட்டங்கள்

### மட்டக்களப்பு மாவட்டத்தில் அமுல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டவேலைகள் துரிதகதியில் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக திரு. ஆர். யோக

செய்யாவிருப்பதாகத் தெரிகிறது.

நொறாட் நிறுவனமும் புனரமைப்பு, புனர்வாழ்வுக் குழுவும் ஒருங்கிணைந்து பல திட்டங்களை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளன.

கோரளைப்பற்று வடக்கிலும் கோரளைப்பற்று பகுதி

களும் வழங்குவதற்கும் மட்டக்களப்பு மருத்துவ மனையைத் திருத்திப் புதுப்பித்து வசதியுள்ளதாக ஆக்குவதற்குவதற்கும் பலகோடி ரூபாய்கள் செலவிடப்படவிருக்கின்றன.

இவ்வேலைத்திட்டங்கள் யாவும் போர்க்கால அடிப்

மட்டக்களப்பு

## புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 31/2 கோடி நஷ்டஈடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டத்தின் கீழ் இதுவரை உயிரிழப்பு, காயமுற்றோருக்கான நஷ்டஈடு 3 கோடி 37 இலட்சம் 49 ஆயிரத்து 750 ரூபா வழங்கப்பட்டுள்ளதாக செயலக புனர்வாழ்வு கிளை நிர்வாக உத்தியோகத்தர் திரு. எஸ். சத்தியானந்தராஜா ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

1200 உயிரிழப்புகளுக்கு நிவாரணம் கோரப்பட்டது. 884 பேருக்கு 3 கோடி 4 இலட்சம் ரூபா வழங்கப்பட்டது. காயமடைந்தவர்கள் 700 பேர் விண்ணப்பித்தனர். 526 பேருக்கு இதுவரை 33 இலட்சத்து 49 ஆயிரத்து 750 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

ஏனையோருக்கு வழங்கப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரை நோக்கி

## சனிக்கிழமை பிரேமா

வேற்று அழைத்துச் சென்றனர்.

உறுப்பினர்கள் மாத்திரமே

(6ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா நகரை நோக்கி முஸ்லிம் அகதிகள் வருகை

(வவுனியா)

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா ஆண்டியா புளியங்குளத்தில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கிடையிலான மோதல் சம்பவங்களையடுத்து அங்கிருந்து சில முஸ்லிம்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இவர்கள் வவுனியா நகரத்திற்கு அண்மையிலுள்ள பட்டாணிச்சி புளியங்குளத்திற்கு அகதிகளாக வந்துள்ளனர். ஆண்டியா புளியங்குளத்தில் இஸ்லாம் மதத்தின மரபைக் கடைப்பிடித்துவரும் முஸ்லிம்களுக்கும், புதிய கொள்கை

(6ஆம் பக்கம் பார்க்க)

# பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வு கருத்தரங்கு!

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வு பற்றிய ஆய்வுக்கருத்தரங்கு இன்று அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

சுவீடன் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் (சிடா) ஆதரவில் நடைபெறும் இக்கருத்தரங்கு காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெறும்.

பாதிக்கப்பட்ட விதவைகளுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள் குறித்து ஆய்வுரைகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக திரு. ஆர். யோகநாதன் பதவியேற்ற பின் புனர்வாழ்வு, புனரமைப்பு ஒருங்கிணைப்புக்கு இன்று வியாழக்கிழமை முற்பகல் இரண்டாவது தடவையாகக் கூடி புனரமைப்பு, புனர்வாழ்வுத் திட்டங்கள் நிறைவேற்றுவது பற்றி மதிப்பீடு

டங்களை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளன.

கோரளைப்பற்று வடக்கிலும் கோரளைப்பற்று பகுதி வாழைச்சேனைப் பகுதியிலும் ஐயாயிரம் ஐயாயிரமாக பத்தாயிரம் வீடுகள் கட்டும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வலைகளும், வள்ளங்

கள் செலவிடப்படவிருக்கின்றன.

இவ்வேலைத்திட்டங்கள் யாவும் போர்க்கால அடிப்படையில் துரிதமாக மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

# முதலாந்தர அதிபர் பரீட்சைக்கு 40 தமிழர்களுக்கே அனுமதி

(வடமராட்சி கிழக்கு)

முதலாந்தர அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 600 பேரில் 40 பேர் மட்டுமே தமிழர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நாற்பது பேரில் முஸ்லிம்களும் அடங்குவர்.

கடந்த வாரம் கல்வி அமைச்சில் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது.

யாழ். மாவட்டத்திலிருந்து 4 பேரும், கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து ஒருவர் மட்டுமே இந்த நேர்முகப் பரீட்சைக்கு கல்வி அமைச்சினால் கடித மூலம் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாம் தர அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கும் தமிழ் மாவட்டங்களிலிருந்து மிகக் குறைந்தளவு தொகையினரே அழைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள ஏராளமான பாடசாலைகள் அதிபர் தர பதவிகள் இல்லாத பதில் அதிபர்களைக் கொண்டே பல வருடங்களாக இயங்கி வருகிறது.

இந் நிலையிலும், போதுமான தொகையினர் முதலாம்,

(6ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் யானை அட்டகாசம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள மகா கச்சைக்கொடி என்ற சிங்களக் கிராமத்தில் மதம் கொண்ட யானை நுழைந்து எட்டு வீடுகளைச் சேதப்படுத்தியிருக்கிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# திறந்த பல்கலைக்கழகத்தில் கொம்பியூட்டர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள இலங்கைத் திறந்தவெளிப் பல்கலைக்கழக வட பிராந்திய நிலையத்தில் தற்பொழுது கொம்பியூட்டர் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை இருநூற்று எழுபத்தைந்து விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதாகத் தெரிகின்றது. இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் பெற விரும்புவோர் உடன் மேற்படி நிலையத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம்.

# சனிக்கிழமை பிரேமா மகேந்திரராசா சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினருக்கும் இலங்கை அரசிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை சனிக்கிழமை இடம்பெறும் எனத் தெரிய வருகின்றது. இப்பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா, செயலாளர் யோகரட்ணம் யோகி அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இச்சந்திப்பின்போது ஜனாதிபதி பிரேமதாசாவையும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் குழுவினர் சந்திக்கவுள்ளார்கள். இச்சந்திப்பு சனிக்கிழமை மாலையில் இடம்பெறலாமெனத் தெரிய வருகின்றது.

# விவசாய அபிவிருத்தி கிராமம் வடமாகாணத்தில் அமையும்

(வவுனியா)

வடமாகாண விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் விவசாய அபிவிருத்தி கிராமங்கள் பல அமைக்கப்பட உள்ளதாக வடமாகாண விவசாய பிரதி மாகாணப் பணிப்பாளர் திரு. க. கணேசரட்ணம் தெரிவித்தார்.

மேற்படி கிராமங்கள் அமைத்தலின் கீழ் முதலில் வவுனியா கூமாங்குளம் கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களிலும் அமைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, மானி

(6ஆம் பக்கம் பார்க்க)

# தொலைபேசிக் கம்பித் திருட்டு; வெளியூர்த் தொடர்பு துண்டிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

தொலைபேசிக் கம்பிகள் திருட்டுத்தனமாக வெட்டும் வேலைகள் மீண்டும் மீண்டும் நடைபெறுவதால் யாழ்ப்பாணத்திற்கான வெளியூர்த் தொலைபேசித் தொடர்புகள் எந்த நேரமும் நிறுத்தப்படலாம் என பிரதேசப் பிரதம தொலைத்தொடர்புகள் பொறியியலாளர் திரு. ரீ. அம்பிகைராஜாவும், தொலைத்தொடர்புகள் பரிசோதகர் திரு. எஸ். பாஸ்கரனும் எச்சரித்துள்ளனர்.

இந்த இணைப்பு வெட்டப்பட்டதால் யாழ். கச்சேரி, பிரதான வீதி, யாழ். தபாற்கந்தோர் ஆகிய இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பிரதான தபாலலுவலகம் முன்பாகவுள்ள பிரதான இணைப்புக்கள் இதுவரை ஆறாவது தடவையாக இரவு நேரம் வெட்டப்பட்டுள்ளதாகவும் இந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

மூன்று தினங்களுக்கு முன்னரும் இவ்வாறு வெட்டப்பட்டதை உடனடியாக திருத்தி அமைத்தும் மீண்டும் இங்கு கம்பிகள் வெட்டப்பட்டுள்ளதாகவும் இவர்கள் ஈழநாதத்துக்குத் தெரிவித்தனர்.

இவ்வாறு தொலைபேசிக் கம்பிகளை வெட்டும் திருடர்களைக் கண்டு பொதுமக்கள் திணைக்கள அதிகாரிகளுக்குத் தகவல் தந்து ஒத்துழைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது,

பொதுமக்கள் ஒத்துழைப்புத் தராவிடில் இனிமேலும் கம்பிகளை வெட்டினால் திருத்த வேலைகள் செய்யப்படமாட்டாதென்றும் இதனால் யாழ்ப்பாணம் - கொழும்பு உட்பட வெளியிடங்களுக்கான தொலைபேசி அழைப்புகள் செயற்படமாட்டாது என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை திருட்டுத்தன

(6ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா மக்கள் வங்கியில் ஊழியர்கள் பற்றாக்குறை

(வவுனியா)

வவுனியா மக்கள் வங்கிக் கிளையில் ஊழியர்கள் பற்றாக்குறை நிலவுவதால் புதிதாகக் கடன் வழங்கல் திட்டங்களை சீராகச்செய்ய முடியாமல் இருப்பதாக இதோடுசம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது மேற்படி வங்கிக் கிளையில் 23 ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர் இவர்களினால் மக்களுக்கு உடனுக்குடன் சேவை செய்யமுடியாமல் உள்ளது. என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

ஆனாலும் இந்த வங்கிக் கிளை அதிக இலாபத்தில்தான் இயங்கி வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடபகுதியில் உள்ள பல மக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர், முஸ்லிம்கள் புறக்கணிப்பு

# நிர்வாக சேவை ஆட்சேர்ப்பு ஜனாதிபதிக்கு மேன்முறையீடு

(கல்லாறு - களுவாஞ்சிக்குடி)

1986 ஆம் ஆண்டுக்கான இலங்கை நிர்வாக சபை ஆட்சேர்ப்பு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் அதிக புள்ளி பெற்றோருக்கான நேர்முகப்பரீட்சை கடந்த மாதம் டிசம்பர் முற்பகுதியில் நடந்தது.

நேர்முகப் பரீட்சைக்குக் குறைந்தளவு தமிழ், முஸ்லிம் பரீட்சார்த்திகளே அழைக்கப்பட்டிருந்தனர். அண்மையில் வெளியிடப்பட்ட நேர்முகப் பரீட்சை முடிவின்படி எந்தத் தமிழரோ, முஸ்லிமோ தெரிவு செய்யப்படவில்லை என்பது அனைவரும் அறிந்ததே.

மட்டக்களப்பு கச்சேரியில் மட்டும் 13 நிர்வாக சேவை உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடமாக இருக்கின்றன என்பது குறிப்படத்தக்கது.

இதேபோல வடக்கிலும் வெற்றிடங்கள் உண்டு.

எனவே இது குறித்து இங்குள்ள சமூக பொதுநல அமைப்புக்கள் சில ஜனாதிபதிக்கு தமிழருக்கும், முஸ்லிம்களுக்கும் அவரது திட்டப்படி இன விகிதாசாரப்படி நிர்வாக

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

அப்பளம் தயாரிப்பாளர்களுக்கு ஏற்றவகையில் தயாரிக்கப்பட்ட உழுந்து மா, கிலோ ரூ 22/- படி பெற்றுக் கொள்ளலாம். M.G.M. No·777 K.K.S Road, Jaffna. (B-507)

### சேவை

Rajz Brand எவர்சில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும் உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்.! சாப்பாட்டு பீங்கான்கள் செற் சட்டிகள் தாச்சிச் சட்டிகள் றேகள் சோஸ்பான்கள் பொரியல் சட்டிகள் டின்னர் செற்கள் ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் Rajz Brand பார்வை அறை AS தேவதாசன் சூறாவத்தை சுன்னாகம். 3/414

நாவலடி அரியாலையில் றோட்டுக்கு அருகாமையில் நெற்காணி 58 பரப்பு விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; பொ. கனகசபாபதி ஐயர் கந்தசுவாமி கோயிலடி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை. (R-75)

(டில்கா வாச் வேக்ஸ்)

யாழ் நகரில் சகலவிதமான மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள DiLKA WATCH WORKS, Oppasite Bus Stand, Jaffna (குறிப்பு) சகல 'சீக்கோ' சிற்றிசன் உதிரிப்பாகங்களும் கையிருப்பில் உண்டு (B-537)


# அன்னை பூபதி தமிழ் பெண்களின் புகழை சர்வதேச அரங்கிற்கு உயர்த்தியவர்

## பூநகரி அஞ்சலிக் கூட்டத்தில் பேச்சு

(பூநகரி)

'அன்னை பூபதி அவர்கள் தன் தியாகத்தின் மூலம் சர்வதேச அரங்கில் தமிழ்ப் பெண்களின் புகழையும், மதிப்பையும் உயர்த்திய பெருமதிப்பைப் பெறுகிறார். இவரைப் போன்று ஏனைய பெண்களும் தமிழ் மக்களின் விடுதலைக்காக உழைக்க முன்வர வேண்டும்.'

இவ்வாறு பூநகரி வாடியடியில் 26-03-90இல் நடைபெற்ற அன்னை பூபதி நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பூநகரிப்பிராந்தியப் பொறுப்பாளர் திரு. சாம் குறிப்பிட்டார்.

பூநகரி மட்டுவில்நாடு - மேற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி சிற்றூரவை கிளை தலைவர் திரு. எஸ். பவான் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

மக்கள் விடுதலை முன்னணி மன்னார் பிரமுகர் திரு. செல்வம் உரையாற்றும்போது விடுதலைப் புலிகள் கடந்த இரண்டுவருட காலம் மறைந்து வாழ்ந்த காலத்தில் தமிழ் மக்கள் பல இன்னல்களுக்கு மத்தியிலும் தமக்களித்த உதவிகளை நினைவு கூர்ந்ததோடு இந்துமதத்தில் 'சிவம் இன்றேல் சக்தியில்லை சக்தியின்றேல் சிவம் இல்லை' எனக் குறிப்பிடுவதுபோல் தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் ஒன்றோடு ஒன்று இணைந்து இருப்பதனாலேயே விடுதலைப் புலிகள் இந்யப் படையை இவ்வளவு மனோ வலிமையுடன் எதிர்த்துப் போராட முடிந்தது எனக் குறிப்பிட்டார்.

மக்கள் முன்னணி பூநகரி அமைப்பாளர் திரு. சாம் வேல்ராஜ், தம்பிராய் சிற்றூரவைக் கிளைத்தலைவர் பொன். தங்கராசா, அதிபர் பொன். தில்லைநாதன், ஆசிரியை செல்வி தவமலர், இரா. செல்வராசா, கிராம சேவையாளர் திரு. புவனேந்திரன் உட்பட பல பிரமுகர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள்.

பூநகரி மகா வித்தியாலய மாணவிகள் கூட்ட ஆரம்பத்தில் அன்னை பூபதியின் படத்திற்கு மலர்கள் சாத்தி அஞ்சலி செலுத்தினார்கள்.

# குருநகர் வர்த்தகர் சங்கத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவு விழா

(விசேட நிருபர்)

''கடந்த போராட்ட காலங்களில் குருநகர் புதிய சந்தை வர்த்தகர் சங்கம் தன்னாலான பங்களிப்பை பொது மக்களுக்கும் போராளிகளுக்கும் செய்து வந்துள்ளமை மறுக்கவோ, மறைக்கவோ கூடியதொன்றல்ல.''

குருநகர் புதிய சந்தை வர்த்தகர்சங்க ஐந்தாவது ஆண்டு வைபவம் குருநகர் நவீன சந்தை மேல் மாடியில் நடைபெற்ற போது தலைமை வகித்துப் பேசிய சங்கத்தலைவர் திரு. செ. அல்போன்ஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது ''இப்பகுதியில் போதைப்பவுடர், கஞ்சா போன்றவற்றை பாவிப்பவர்கள், விற்பவர்கள் மீது ஒழுங்கு நடவடிககை மேற்கொண்டது பெருந்தொகையான களவுப்பொருட்களை மீட்டு உரியவர்களிடம் ஒப்படைத்தது சந்தையில் தரக்குறைவான பொருட்கள் விற்றல் விலைகளில் நேர்மையின்மை போன்றவற்றை கண்காணித்து போராட்ட காலங்களில் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலங்களில் கலந்து கொள்ள கடைகளை மூடி ஒத்துழைத்தது போன்ற பங்களிப்பை எமது சங்கத்தினூடாகச் செய்ய முடிந்ததெல்லாம் நினைவு கூரத்தக்கன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அதையடுத்து நடைபெற்ற நிர்வாகிகள் தெரிவில் திரு. செ. அல்போன்ஸ் மீண்டும் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். திரு.எம் சி. அமிர்தநாதன் உப தலைராகவும், திரு. க. சி. கிருஸ்ணன் செயலாளராகவும், திரு. கா. சுப்பிரமணியம் பொருளாளராகவும் தெரிவானார். (21)


யாழ்நகரில்
இன்றைய சினிமா

வின்சர் - யாழ்
10·30 4.40 4.45 7.00
THE COUNTESS DIEDOFLAUGHTER
(Adults Only)!

81 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்',
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி, நடித்த
மனிதன்
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
102 நாள் வெற்றிநடை போடுகிறது
ராஜாதி ராஜா
(கலர்)


# சுகாதாரமற்ற முறையில் தீவுப்பகுதி உணவுக்கடைகள்

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதிகளில் உள்ள பல உணவுச் சாலைகளும் தேநீர் கடைகளும் சுகாதார விதி முறைகளுக்கு புறம்பாக நடைபெற்று வருவதாக புகார்கள் தெரிவிக்கின்றன.

இக்கடை உரிமையாளர்கள் தமது வியாபார நோக்கத்தை முக்கியமாக கருதுகின்றார்கள் ஆனால் சுகாதாரத்தைப்பற்றி சிந்திப்பதே இல்லையெனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வுணவுக் கடைகளுக்கு பசியுடன் ஒருவர் நுளைந்தால் அவரைச்சுற்றியும் அவருக்கு வைக்கப்பட்ட உணவை சுற்றியும் ஈக்களே இரைச்சலுடன் மொய்த்துக் கொள்கின்றன.

கடைகளின் பின்பக்கம் சென்றால் நாற்றம் எடுப்பதுடன் வயிற்றைக் குமட்டிக் கொண்டு வரும் நிலையும் உருவாகின்றது. இதுபற்றி இப்பகுதிகளில் கடமையாற்றும சுகாதாரப்பரிசோதகர்களை அலட்சிய மனப்பான்மையுடன் இருப்பதாகவும் அறியப்படுகின்றது. சுகாதார திணைக்களத்தினரும், இப்பகுதி பிரதேச சபையின் அதிகாரிகளும் இது விடயத்தில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமென இப்பகுதி மக்கள் ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்தனர் (15)

# புதுவருடத்திற்கு விளையாட்டுப் போட்டி

(ஈச்சமோட்டை)

புதுவருட தினத்தை முன்னிட்டு யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிடையே விளையாட்டுப் போட்டிகளும் கலை கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெற இருப்பது தெரிந்ததே.

மேற்படி போட்டிகளில் விளையாட்டு அமைச்சினால் பதிவு செய்யப்பட்ட கழகங்கள் மாத்திரம் அனுமதிக்கப் படுவார்கள்.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. சபாபதிப் பிள்ளை கேட்டுக்கொண்டுள்ளார். (43)

# கிழக்கு மாணவர்கள் யாழ். விஜயம்

(அட்டாளைச்சேனை)

வடகிழக்கில் ஏற்பட்டுள்ள அமைதியின் நிமித்தம் வடமாகாணம் நோக்கி கிழக்கு மாகாண மாணவர்கள் தங்களது உயர் கல்வியைத் தொடர்வதற்காக தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றனர்.

இவர்கள் யாழ்ப்பாணப்பகுதிகளிலுள்ள வீடுகளில் தங்கியுள்ளனர். இவர்களில் அனேகமானோர் அக்கரைப்பற்று அட்டாளைச்சேனையைச் சேர்ந்தவர்களாகும். (46)

# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் றோ.க. பாடசாலைக்கு உதவும்

(பண்டத்தரிப்பு)

"இது ஒரு ஆரம்பப் பாடசாலையாக இருப்பினும் இந்தச் சிறிய குழந்தைகளை ஆசிரியர்களின் பற்றாக்குறையின் மத்தியிலும் இவ்வளவு சிறப்பாகப் பயிற்றி பெரிய பாடசாலைகளுக்கு நிகராக இவ் விளையாட்டுப் போட்டியை நடத்தியமை மிகவும் பாராட்டிற்குரியது.

இப்பாடசாலைமிகவும்வசதி குறைந்தசூழலிலுள்ளபிள்ளைகளே படிப்பதாகவும், ஆசிரியர் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக்குறை இங்குள்ள முக்கிய பிரச்கினைகள் என்றும், அதிபர் எனக்குக் கூறினார்.

எனவே ஒரு தொண்டர் ஆசிரியருக்குரிய வேதனத்தை வழங்குவதென்றும் ஒரு வகுப்பறைக்குவேண்டிய தளபாடங்களைப் பெற்றுக்கொடுப்பது என்றும் எனது நிறுவனத்தின் ஊடாக நடவடிக்கையை மேற்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உப தலைவர் திரு. ந. நல்லதம்பி இளவாலை றோ. க.த. ஆண்கள் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்கள்.

பாடசாலை அதிபர் திரு. ஆ. சவரிப்பிள்ளை தலைமையில் அருட்திரு. பற்றிக் அடிகளார் ஒளியேற்ற, அருட்திரு. எ. யேசுதாசன் அடிகளார் கொடியேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்கள்.

இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினராக வருகை தந்த இளவாலைக் கொத்தணி அதிபர் அருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்அடிகளாரும் உரையாற்றினார்.

மாணவர்கள் ஜோண், போல், பீற்றர் இல்லங்களாகப் பிரிந்து பங்கு பற்றினார்

# விளையாட்டுப் போட்டி

அட்டாளைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் இயங்கிவரும் ஒலுவில், அட்டாளைச்சேனை இளைஞர் கழகங்களின் விளையாட்டுப் போட்டிகள் தொடர்ந்து நான்கு நாட்களாக அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மைதானத்தில் நடைபெற்றன. (45)

# கிராமசேவகர் புதிய பிரிவுகள்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைக் கிராம சேவைஅலுவலர் பிரிவு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இம்மூன்று புதிய பிரிவுகளுக்கும் மூன்றுகிராமசேவை அலுவலர்கள் நியமனம்செய்யப்பட்டுள்ளனர்.

பயிர்ச்செய்கை உத்தியோகஸ்தர் திரு. கே. எஸ். இராசையா நெடுங்குளம் கிராமசேவை அலுவலராக

# கோண்டாவில் வடக்கு இரவில் இருள்

(கோண்டாவில்)

கோண்டாவில் வடக்கு பகுதி முற்றாக இருளில் மூழ்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள ஐந்து சந்திகளிலும் பொருத்தப்பட்டுள்ள மின்சார விளக்குகளில் நான்கு பழுதடைந்த நிலையிலும், எஞ்சிய ஒரு சந்தியின் விளக்கும் ஐந்து நிமிடங்களுக்கு ஒரு

# 10 ஆவது ஆண்டு விழா

(அனலைதீவு)

அனலைதீவு சமூக சேவா சங்கத்தின் பத்தாண்டுகள் பூர்த்தியையொட்டியும் இச்சங்கத்தின் பாலர் பாடசாலைகளின் பத்தாண்டுகள் பூர்த்தியையொட்டியும் இன்று வியாழக்கிழமை பாலர் பாடசாலைகளின் கலை விழா நடைபெறவுள்ளது.

அனலைதீவு ஐயனார் கோயில் அன்னதான சபை மண்டபத்தில் மாலை 5.30க்கு வைத்திய கலாநிதி திரு. ந. சர்வானந்தா தலைமையில் இவ்விழா நடைபெறும்.


அன்னை பூபதிக்கு எமது

அஞ்சலி!


# புனை அபிவிருத்திச் சபையின்

## பனை அபிவிருத்திச் சபையின்

# மாணவர் கட்டுரைப் போட்டி

பனை அபிவிருத்திச் சபை, பாடசாலை மாணவர்களுக்கிடையேயான கட்டுரைப் போட்டியொன்றை நடாத்தவிருக்கின்றது.

இக்கட்டுரைப் போட்டி 14 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்கானதும், 14 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கானதுமாகிய இரண்டு பிரிவுகளாக நடாத்தப்படுகின்றது.

கட்டுரைத் தலைப்பு "நமது சமூக பொருளாதார அபிவிருத்தியில் பனை வளத்தின் பங்கு,, என்பதாகும். பனைவளத்தின் சமூக பொருளாதார முக்கியத்துவத்தை வெளிக்கொணர்வதாகக் கட்டுரைகள் அமைந்திருக்க வேண்டும். அத்தோடு கட்டுரையின் மொழிநடையும், சீரான அமைப்பும் கவனத்திற் கொள்ளப்படும். கட்டுரைகள் சொந்தக் கையெழுத்தில் 8"X12" அளவுத் தாளில் ஒரே பக்கத்தில் எழுதப்பட்டதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பிரிவுக்கும் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளாக முறையே ரூபா 500/-, ரூபா 300/-, ரூபா 200/- வழங்கப்படும்.

கட்டுரைகள் போட்டியாளரால் சொந்தமாக எழுதப்பட்டது என்பதைத் தலைமையாசிரியர் அல்லது பெற்றோர் உறுதிசெய்து, பெயர், பாடசாலை, வகுப்பு, வயது ஆகிய விபரங்களுடன் எதிர்வரும் 21.04.90க்கு முன்பு செயலாளர், பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புச் செயலகம், யாழப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கட்டுரை அனுப்பும் உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் 'கட்டுரைப்போட்டி' என்று குறிப்பிடப்பட வேண்டும்.

குறிப்பு:- பனை அபிவிருத்திச் சபை ஊழியர்களும், அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் கலந்துகொள்ள தகுதியற்றவர்களாவர்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

B/587


SULTANS

M. M. S. Abdul Cader & Bro.
GENERAL HARDWARE MERCHANTS
AND AGENTS
SAFETY TRANSPORT SERVICE

**Kandy Road, Chavakackcheri**

B/527



அன்னை பூபதிக்கு
எமது அஞ்சலிகள்



நவநாகரிக ஐவுளிகளுக்கு
நம்பிக்கையான ஸ்தாபனம்

**றஞ்சனாஸ்**

8, நவீன சந்தை,
கண்டி வீதி,
சாவகச்சேரி.

(B532)


ஐந்து நிமிடங்களுக்கு ஒரு முறை நின்று, நின்று எரியும் நிலையிலுள்ளது.

பழுதடைந்துள்ள இந்த விளக்குகள் நீண்டகாலமாக திருத்தப்படாமல் உள்ளமையினாலேயே இப்பகுதிஇருளில் மூழ்கிக்கிடப்பதுடன், இரவு நேரங்களில் மக்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்குவதும் குறிப்பிடத்தக்கது. (34)

கப் பிரிந்து பங்கு பற்றினார்கள். போல் இல்லம் 137 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தையும், பீற்றர் இல்லம் 99புள்ளிகளைப்பெற்று இரண்டாவதுஇடத்தையும், ஜோண் இல்லம் 83 புள்ளிகளைப் பெற்று முன்றாவது இடத்தையும் வகித்துக்கொண்டன. (12)

கிராமசேவை அலுவலராகவும். திரு. எஸ்.எம். டொமினிக் கொழும்புத்துறை கிழக்கு கிராம சேவை அலுவலராகவும். பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்செல்விஆர்.கமலவேணி கொழும்புத்துறை மேற்குக் கிராமசேவை அலுவலராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். (24

## குடியரசுகள் பிரிந்து செல்லலாம் ஆனால் ஏனைய குடியரசுகள் ஏற்க வேண்டும்

— கொர்ப்பசேவ்

(மொஸ்கோ)

சோவியத் யூனியனில் இருந்து குடியரசுகளைப் பிரிந்து செல்ல அனுமதிக்கும் புதிய சட்டத்தை சோவியத் பாராளுமன்றத்தின் மூடிசபை அங்கீரிகத்தது. அதேவேளை இன்னொரு சபை இதன் மீதான வாக்கெடுப்பை விரைவில் நடாத்தப் போகிறது.

சுதந்திரப் பிரகடனத்தை அறிவிப்பதற்கு முன்பாக ஐந்து ஆண்டு தவணை இடைவெளி இருக்கவேண்டும் என்றும் பல கடுமையான நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் அந்த புதிய சட்டம் கூறுகின்றது.

இச்சட்டம் 163 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் பற்றிக் கூறிய ஜனாதிபதி கொர்ப்பசேவ் சோவியத் யூனியனின் சட்டப்படி அவர்கள் பிரிநது செல்வதற்கு உரிமை இருக்கிறது, ஆனால் ஏனைய குடியரசுகளின் கருத்துக்கள் விவாதிக்கப்பட வேண்டும் என்றும் அதனையொட்டியே அக்குடியரசு பிரிந்து போகலாமா அல்லது விடலாமா என்பதைப்பற்றி தலைமைப்பீடம் முடிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்.


**தீவக மக்கள் சார்பாக அஞ்சலி**

தமிழீழ மக்கள் இடர் தீர வேண்டி
உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த
தியாகதீபம்

**அன்னை பூபதிக்கு எமது இதய அஞ்சலிகள்**

இடைப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம்

மொந்திபுலம் காரைநகர்

(B589)

# பஞ்சாப் பட்டியாலா நகரில்
# விழாவில் குண்டுவெடித்து 30 பேர்பலி

(சண்டிகார்)

இந்தியாவின் மாநிலமான பஞ்சாப்பில் அமிர்தசரஸ் நகரின் அண்மையிலுள்ள பட்டியாலா நகரில் இடம்பெற்ற வெடிகுண்டு சம்பவத்தில் 30 பேர் வரை இறந்துள்ளனர். 65 பேர்வரை காயமுற்றனர்,

பட்டியாலா நகரததில் ஸ்ரீ ராம நவமி உற்சவம் இந்துக்களால் செவ்வாய்க்கிழமை கொண்டாடப்பட்டது. இது தொடர்பான ஊர்வலத்தில் பெருமளவில் இந்துக்கள் கூடியிருந்தனர் இவ் ஊர்வலத்திற்கு வீசப்பட்ட குண்டு வெடித்ததில் 30 பேர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலுச்கு சீக்கியத் தீவிரவாதிகளே காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இக்குண்டு வெடிப்பு இடம் பெற்ற பட்டியாலா நகரம் ஆனது பாகிஸ்தான் இந்தியா எல்லைப் புறத்தில் அமைந்திருக்கிறது. இதன் காரணமாக இங்கு சீக்கிய தீவிரவாதிகளின் நடமாட்டம். வன்செயல்கள் பெருமளவில்இடம் பெறுகின்றது. இது பற்றிக் கருத்துத் தெரிவித்த சீக்கிய பொதுமக்கள் இந்துக்களுக்கும், தமக்கும் இடையே மோதல்களை ஏற்படுத்தும் வகையில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக கூறுகின்றனர்.

இக் குண்டுவெடிப்புச் சம்பவத்தை தொடர்ந்து அந்நகரில் இரு மதத்தவர்களுக்கும் இடையே பெரும் மோதல்கள் இடம்பெற்றன. இதனை தவிர்க்கும் நோக்குடன் கால வரையறையற்ற ஊரடங்குச் சட்டம் அரசினால் செயற்படுத்தப்பட்டது.

தேசிய முன்னணி அரசு பஞ்சாப்பில் நடக்கும் வன்செயல்களை அடக்க பலவழிகளை கையாண்ட போதிலும் அங்கு கலவரங்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. மார்ச் மாதத்தில் பொதுமக்களில் 120 பேரும், தீவிரவாதிகள் என்ற வகையில் 80 பேரும் இறந்துள்ளனர்.

அதேவேளை பஞ்சாப்பில் கூட்டு அரசின் நேரடி ஆட்சியை நீடிக்கும் அரசியல் சட்ட திருத்த மசோதாவை அரசு மீண்டும் கொண்டுவரப் போகிறது. இதற்கான தீர்மானம் பாராளுமன்றத்தில் விரைவில் நிறைவேற்றப்படும்

## நேபாளத்தில் அரசிற்கெதிரான போராட்டத்தில் ஆறு பேர் பலி!

(காட்மண்டு)

நேபாளத்தில் கடந்த ஐந்துநாட்களாக நடந்து வரும அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்ளில் ஆறு பேர் கொல்லப்பட்டனர்.

இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை ஒழுங்கு செய்த ஜனநாயக ஆதரவு கட்சியினர் மீது பொலிசார் சுட்டதில் ஆறு பேர் கொல்லப்பட்டனர்.

திங்களன்று சுட்டுக் கொல்லப்பட்ட ஒருவரின்இறுதி ஊர்வலத்தில் 50,000 மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டனர். இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்ட பொது மக்கள் அரசின் நடவடிக்கையை எதிர்த்து கோஷ மிட்டனர்.

## இந்தியா அண்டை நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாது

(லண்டன்) - வெங்கட்ராமன்.

இந்தியா தனது அண்டை நாடுகளுடன் நெருங்கிய சமூகமான உறவுகளைப் பேணும் என்று இந்தியஜனாதிபதிஆர். வெங்கட்ரமான் வலியுறுத்தியிருக்கிறார்.

லண்டனில் செவ்வாய்இரவு பிரித்தானிய மகாராணி அளித்த அரசவிருந்தில் ஜனாதிபதி பேசுகையில் இந்தியா தனது பிராந்தியத்தில் சமாதானத்தையும், நல்லெண்ணத்தையும் நாடுகிறது என்று குறிப்பிட்டார்.

அதேவேளை அயல் நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை என்றும் இதுபோலவே இந்தியாவின் உள் விவகாரங்களில் அயல் நாடுகள் தலையிடக் கூடாது என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

ஐரோப்பிய சமூகம் பற்றிப் பேசுகையில் இன ஒதுக்கலை அடக்குவதில் பிரிட்டோனியா அரசு மீது தொடர்ந்து சர்வதேச நெருக்கடி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இவ் விருந்தில் பேசிய மகாராணி ஐரோப்பாவில் பல புதிய மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் இந்தியாவுடனான நட்புறவை இங்கிலாந்து பேணும் எனஉறுதியளித்தார். கடந்த 29 ஆண்டுக் காலத்திற்குப் பின் இந்தியா ஜனாதிபதியின் லண்டன் வருகை குறிப்பிடத் தக்கமாற்றம் எனஅவர் கூறினார்

## திருநகரில் அடையாள உண்ணாவிரத

(கிளிநொச்சி)

திருநகரைச் சேர்ந்த மயில் வாகனம் பாக்கியநாதன் (நாதன்) என்பவர் அன்னை பூபதியின் ஞாபகார்த்தமாக கடந்த 5 நாட்களாக உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகிறார்

திருநகர் கிராம முன்னேற்றச் சங்கமுன்றலில் நடைபெற்றுவரும் இவ் உண்ணாவிரதத்தில் இவருடன் தினமும் பலர் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

## மக்கள் முன்னணி நடவடிக்கையால் அணைக்கட்டுவேலை நடைபெறுகிறது

(வந்தாறுமூலை)

வந்தாறுமூலை கிரான்புல் வடிச்சல் அணைக்கட்டின் வேலைகள் தற்போது விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் தலைமையின் கீழ் நடைபெறுகின்றது.

மேற்படி அணைக்கட்டை கட்டுவதனால் வந்தாறுமூலை சிற்றாண்டி கிராம விவசாயிகளின் வயல்கள் ஆயிரம் ஏக்கருக்கு மேல் சிறுபோக செய்கைக்கு பயன்படுத்தப்படுகிறது.

கடந்த காலங்களில் இவ் அணைக்கட்டு ஒழுங்காக கட்டப்படுவதில்லை. இதனால் வருடாவருடம் ஏற்படும் வெள்ளப் பெருக்கினால் உடைந்து விடுகிறது. சிறுபோகச் செய்கை பெரிதும் பாதிப்படைவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அத்துடன் மேல் பகுதியில் வேளாண்மை செய்யும் விவசாயிகளின் போக்குவரத்தும் பாதிப்படைகிறது.

எனவே இனி வரும் காலத்திலாவது இவ் அணைக்கட்டு நிரந்தரமான அணைக்கட்டாக அமைந்தால் விவசாயம் பெரிதும் பாதிப்படையாது என்பது குறிப்பிடத்தக்கது.

## தீவுப்பகுதியில் புதுவருட விளையாட்டு

(வேலணை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் எதிர் வரும் புத்தாண்டையொட்டி பல விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். ஜீவரத்தினம் நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

மரதன் ஓட்டப்போட்டி, நீச்சல்போட்டி, உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப் பந்தாட்டம் ஆகிய இன்னும் பல போட்டிகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகளையும்

## இந்தியப்படையின் துரோகச் செயலை உலகுக்கு தெரியப்படுத்தியவர் அன்னை பூபதி




## தென்னிந்திய பாடநூல்களின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை கொடுத்தவர்

### ஈழகேசரி பொன்னையா விழாவில் உரை

(தெல்லிப்பழை)

பாடநூல்களைப் பதிப்பித்ததன் மூலம் இளம் சிறார்களின் பிஞ்சு மனத்தில் சுதேசியஉணர்வை ஊட்டியும், ஈழகேசரிப்பத்திரிகையை ஆரம்பித்ததன் மூலம் தமிழ்மக்களைச் சுதேசியப் பிரக்ஞை கொண்ட மக்களாக வாழப் பழகிக் கொள்ளும் திருப்புமுனைக்கு வித்திட்டும், பழைய இலக்கண, இலக்கிய நூல்களைப்பதிப்பித்ததன் மூலம் இலக்கணத்தை முறையாகப் பயிலும் வாய்ப்பையும் தமிழ் இலக்கியப் பரிச்சியத்தை மாணவர் மத்தியில் உருவாக்கவும் தனது திருமகள் அழுத்தகம் மூலம் ஈழகேசரிப் பொன்னையா புரிந்தபணி காத்திரமானது மட்டுமன்றி ஈழத்து அச்சகக்கலை வளர்ச்சியினின்றும் அன்னியப்படுத்தப்பட முடியாததுமாகும்.

இவ்வாறு இலங்கைத்திறந்த வெளிப்பல்கலைக்கழக விரிவுரையாளரும், சட்டத்தரணியுமான பொன். பூலோகசிங்கம் குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் வடமாகலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெற்ற ஈழகேசரிப் பொன்னையா நினைவுவிழாவில் நினைவு நாள் உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார். அண்மையில் இவருக்கு உலகத்தமிழ்ப்பண்பாட்டுக்கழக மகாநாட்டில் யாழிசைச்செல்வர் என விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறித்து சன்மார்க்க சபை சார்பாக அகில இலங்கைக் கம்பன்கழக அமைப்பாளர் திரு இ. ஜெயராஜ் மலர் மாலை அணிவித்து வாழ்த்தினார்.

பொன். பூலோகசிங்கம் மேலும் தனதுரையில் ஈழகேசரிப்பொன்னையா அவர்கள் வாழ்ந்த காலகட்டத்தில் தமிழ்ப்பகுதிகளில் இருந்த ஆரம்பப்பாடசாலைகளிலும் கூட தென்னிந்தியப் பாடநூல்களேஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தன. இப்பாட நூல்களை அடிப்படையாகக் கொண்ட தமிழ்க் கல்விப் போதனை என்பது எமது சூழலிற்கு முற்றிலும் புறம்பானது மட்டுமன்றி எமது மூத்த முன்னோடி அச்சகக் கலைத் தொழிலாளர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் சன்மார்க்கசபையின் பணியும் பாராட்டுதற்குரியதே.

இவ்வாறுமயிலங்கூடலூர்பி. நடராசன் அவர்கள் மேற்படி விழாவில் கௌரவிக்கப்பட்ட அச்சகக்கலை வல்லுனர்கள் மு. சபாரத்தினம் சி. சின்னத்துரை ஆ. முத்தையா ஆகியோருக்குப் பாராட்டுரை வழங்குகையில்குறிப்பிட்டார். இக்கலைஞர்களை யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. பொ.பாலசிங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்

பண்டத்தரிப்பு கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் இ சிவானந்தம் ஆரம்பித்து வைத்த இவ் விழாவில் திரு. சு. வேலு பிள்ளை ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை ஆகியோரும் உரையாற்றினர். (26)

## கிளிநொச்சி

# உலகுக்கு தெரியப்படுத்தியவர் அன்னை பூபதி

## கோண்டாவில் கூட்டத்தில் ஆஞ்சநேயர் உரை

(கோண்டாவில்)

''அமைதியை பாதுகாப்பவர்கள் என்ற போர்வையில் தமிழீழ மண்ணில் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற்கொண்டவர்கள் இந்தியப் படையினர், இந்த உண்மையை, இந்த துரோகச் செயலை உலக அரங்கு அறியும் வகையில் தன்னையே அர்ப்பணித்தவர்தான் தியாகச் சுடர் அன்னை பூபதி'' என்று தமிழீழ விடுதலைப் புலிகள் வலிகாமம் பிராந்திய பொறுப்பாளர் திரு ஆஞ்சநேயர் கூறினார்.

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்ற சங்க முன்றலில் அன்னை பூபதி நினைவஞ்சலிக் கூட்டம் கடந்த ஞாயிறு மாலை நடைபெற்றது.

கோண்டாவில் பகுதி தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் திரு. ரங்கன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய திரு. ஆஞ்சநேயர்- ''ஆயுதப் போராட்டம், இராஜதந்திரம் ஆகிய துறைகளில், சர்வதேச ரீதியாக ஏனைய இயக்கங்களிலும் பார்க்க, குறுகிய காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் முதன்மை வகிப்பதை எவரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. இந்த வரலாற்று ரீதியான பெருமைக்கு விடுதலைப் புலிகளது வலிமை மிக்க நெஞ்சுறுதியும், தலைவர் பிரபாகரனின் உறுதி மிக்க இலட்சிய வேட்கையுமே ஆகும் என்றார்.

கூட்டத்திற்கு தலைமை வகித்த திரு. ரங்ன் தனது உரையின்போது ''தமது மண்ணை மீட்பதற்கான புனிதப் போரில் தமது வாழ்க்கையையே தியாகம் செய்ய சளைத்தவர்கள் அல்ல தமிழ் மக்கள். இந்த தியாகத்தின் உயிர் நாடியாக அமைந்தவர் தான் அன்னை பூபதி'' என்றார்.

---

## சீ பாங்க் விசா கார்ட்

(தெல்லிப்பழை)

இலங்கை வங்கி தனது பொன்விழாவை முன்னிட்டு அறிமுகம் செய்த சீ பாங்க் விசா கார்ட் திட்டத்திற்கு சுன்னாகம் கிளை மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்களை இத்திட்ட வாடிக்கையாளர்களுக்கு அறிமுகம் செய்யும் நிகழ்வு கடந்த திங்களன்று இலங்கை வங்கி சுன்னாகம் கிளையில் அதன் முகாமையாளர் எம். பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இலங்கை வங்கி யாழ்-மாவட்ட முகாமையாளர் திரு. கே கணேசமூர்த்தி அவர்களால் இத்திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்களான சுன்னாகம் இளவரசி ரெக்ஸ்ரைல்ஸ், துர்க்கா ஸ்ரேஷனர்ஸ் சக்ரா பார்மஸீ தாஸ்ஹாட்வெயாஸ், நாகலிங்கம் பெற்றோல் நிலையம் என்பனவற்றின் உரிமையாளர்களை வாடிக்கையாளர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

இலங்கை வங்கி யாழ்-மாவட்ட அலுவலகத்தைச் சேர்ந்த திரு. வி. பாலச்சந்திரன், சுன்னாகம் கிளை உதவி முகாமையாளர் திரு. விவேகானந்த சர்மா ஆகியோரும் உரையாற்றினர். (26)

---

## 84ஆயிரம் ரூபாவுடன் மறைந்த வெளிநாட்டு முகவர் மீது புகார்

(கோண்டாவில்)

காலதாமதமின்றி கவணை அடிப்படையில் உரியவரிடம் பணத்தை கையளிக்குமாறு வெளிநாட்டு முகவர் ஒருவருக்கு கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்ற சங்கம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது - கோண்டாவில் வடக்கு வாசியான எம். உதயகுமார் என்பவர் தன் மகனை ஜேர்மனிக்கு அனுப்பி வைக்கும் நோக்கத்துடன் இதே இடத்தைச் சேர்ந்த வெளிநாட்டு முகவர் ஒருவரிடம் 84 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கொடுத்துள்ளார்.

பணம் கொடுக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும் குறிப்பிட்டபடி பையனை ஜேர்மனிக்கு அனுப்பி வைக்கப்படாததுடன், பணத்துக்கு எவ்வித முடிவும் அற்றநிலையில் பணம் கொடுத்தவர் அங்கலாய்க்கலானார்.

நீண்ட காலமாக கொழும்பிலேயே சீவியம் நடத்தி வந்த மேற்படி முகவர் சில தினங்களுக்கு முன்பு சொந்த ஊரான கோண்டாவிலுக்கு வந்தபொழுது இருபகுதியினருக்குமிடையில் சச்சரவு ஏற்படலாயிற்று.

இந்நிலையிலேயே இப்பிரச்சினையில் தலையிட்ட கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்ற சங்கம் விசாரணையை மேற்கொண்ட பின்பு காலதாமதமின்றி தவணை அடிப்படையில் முழுப் பணத்தையும் ஒருவரிடம் கையளிக்குமாறு முகவருக்கு தீர்ப்பு வழங்கியுள்ளது. (34)

---

பல போட்டிகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகளையும் அவர் செய்துள்ளார்.

கம் குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் வடமாநில சித்திர வித்தியாதிகாரி

---

## மட்டுநகர் வெபர் அரங்கில் அடையாள உண்ணாவிரதம்

(வந்தாறுமூலை)

அன்னை பூபதியின் இரண்டாண்டு நினைவஞ்சலியைச் செலுத்தும் முகமாக மட்டக்களப்பு விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பின் சார்பில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு அரங்கில் 28ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி உண்ணாவிரதத்துக்கு புனித மிக்கல் கல்லூரி, மத்திய கல்லூரி, வின்சன்ற் மகளிர் கல்லூரி, சிவானந்தா மகா வித்தியாலயம், ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலை, அரசடி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இருந்து மாணவர்கள், ஆசிரியர்கள் பங்களித்துக் கொண்டனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளரும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவருமான திரு. கரிகாலன், மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் சுரேன், அரசியல் பொறுப்பாளர் திரு. விசு, பிரதித் தளபதி திரு. றீகன், தொழிற்சங்க சம்மேளனப் பொறுப்பாளர் பொன் வேணுதாஸ் ஆகியோர் இவ் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டு சிறப்பித்து, இரங்கல் உரையாற்றி உள்ளனர்.

---

## இளம் புலி கமல் நினைவு மண்டபத் திறப்பு விழா

(கிளிநொச்சி)

எம்மைப் பயங்கரவாதிகள் எனக் கூறித் திரிந்த அரசாங்கமே இன்று எம்மை அழைத்துப் பேச்சு வார்த்தை நடாத்தி வருகிறது இது எமது வீரர்கள் சிந்திய குருதியால் மறைந்த எமது மாவீரர்களின் தியாகங்களினால் ஏற்பட்ட விளைவேயாகும்.

இளம் புலி கமலின் ஞாபகார்த்த மண்டபத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கோபி மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி மண்டபம் கனகாம்பிகை குளத்து மக்களால் கட்டப்பட்டு முன்னாள் கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சிவகுமாரினால் திறந்து வைக்கப்பட்டது.

திரு. எஸ். ஆலாலசுந்தரம் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இம் மண்டபத் திறப்பு விழாவில் திருமதி கி. ஜே. பொன். தில்லைநாயகம் மறைந்த வீரன் கமலின் உருவப்படத்தை திரை நீக்கம் செய்து வைத்தார்.

கமலின் தாயார் பாலசாமி இராசேஸ்வரி குத்து விளக்கை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார் திறப்பு விழாவிற்கும் கலை விழாவிற்குமான ஏற்பாடுகளை பாரதிபுரப் பிரதேசப் பொறுப்பாளர் ஜமால் மேற்கொண்டார்.

மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கோபி புலிக்கொடியை ஏற்றி வைத்துப் பேசினார்.

---

சூழலிற்கு முற்றிலும் புறம்பானது மட்டுமன்றி எமது ஈழத்துச் சூழலில் வாழும் தமிழ்ச் சிறார்களுக்குப் புரியாத மொழிநடையைக் கொண்டதாகவும் இருந்தமையால் பல முரண்பாடுகளும் அமையக் காரணமாகவிருந்தன. முற்றிலும் பொருந்தாத ஒரு புற நடையான கல்விச் சூழலில், புரியாதமொழிநடையிலமைந்த பாட நூல்கள் எமது தமிழ்ச்சிறார்களின் கல்விக்குறிக்கோளிற்கு குந்தகமாக அமைந்ததோடு ஈழத் தமிழர்களின் தனித்துவமான கல்விவளர்ச்சிக்கான பரிமாணங்களைச் சிதைப்பனவாகவும் காணப்பட்டன. இந்நிலையை அறவே வெறுத்த திரு பொன்னையா அவர்கள் எமது கலாச்சாரப் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் முடிவடையாத வளர்ச்சியைக் கருத்திற் கொண்டும் ஈழத் தமிழர்களின் தனித்துவமான சிறப்பியல்புகளை வெளிப்படுத்தக்கூடியவகையிலும் அறுபத்திமூன்று பாடநூல்களை அச்சுவாகனமேற்றி வெளியிட்டார். இதன்மூலம் தென்னிந்தியப்பாடநூல்களின் ஆதிக்கத்தினின்றும் ஈழத்தமிழரின் பாடவிதானத்திற்குவிடுதலை கொடுத்தவர் என்றார்.

அச்சகக்கலை என்பது இன்று வெள்ளைத்தாளில் கறுப்பு மையினால் அச்சடிப்பதே என்ற நிலைக்கு தாழ்ந்துள்ளது. இன்று வெளியாகும் பலபத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்களில் எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. பலபத்திரிகைகளின் ஆசிரியத் தலையங்கங்களில் கூட இப்பிழைகள் காணப்படுகின்றன. அந்தளவிற்கு இன்று அச்சகக்கலை பின் தங்கியுள்ளமை கவலையளிக்கிறது. இந்நிலையில் எழுத்துப்பிழையின்றி, இலக்கணப்பிழையின்றி, சிறந்த அழகிய நல் வடிவமைப்புடன் பல தலைசிறந்த நூல்களை வெளியாக காரணமாயிருந்த மூன்று

---

## கிளிநொச்சி மேற்கில் சமாதான சபை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மேற்கில் இரண்டாவது சமாதான சபை உருவாக்கப்பட்டுள்ளது.

இச்சமாதானசபை கோணாவில், அக்கராயன் குளம், ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம், நஞ்சுண்டகாடு ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் இடம்பெறும் குற்றச செயல்களைத் தடை செய்வதற்காகவும், அங்கு இடம்பெறும் குற்றச் செயல்களை விசாரித்து நீதி வழங்குவதற்காகவுமே இச் சமாதான சபை உருவாக்கப்பட்டது.

---

## கல்வி நிலையத்துக்கு போராளியின் பெயர்

(கிளிநொச்சி)

வீரமரணமடைந்த விடுதலைப் புலி கர்ணனின் பெயரை ஜெயந்திநகரிலுள்ள விஞ்ஞானக் கல்வி நிலைய வீதிக்குச் சூட்டுவது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜெயந்திநகர் தையல் பயிற்சி நிலைய மைதானத்தில் நடைபெற்ற அன்னை பூபதியின் நினைவுதின வைபவத்தில் மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அன்னையின் நினைவாக மேற்படி மைதானத்தில் நடைபெற்ற உண்ணாவிரதம் சிற்றூரவை உறுப்பினர் திரு. த. கனகலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

சுழற்சிமுறை உண்ணாவிரதத்தில் தினமும் பெருந்தொகையான மக்கள் பங்குபற்றி வருகின்றனர்.

# கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி வெற்றி

(யாழ். விளையாட்டு நிருபர்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணிக்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி அணி இன்னிங்ஸாலும் 30 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

இப்போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணித்தலைவர். நா. ஜெயராஜ் சிறப்பாக ஆடி 127 ஓட்டங்களைப் பெற்றார். இதில் 23 பவுண்டறிகள் அடங்கி இருந்தன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி மொத்தம் 129 ஓட்டங்களைப் பெற்றது. பிரபுராம் 33, மதியழகன் 17, றொபின்சன் 14, சந்திரகுமார் 11, ஜெயகோபன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பிரபாகரன் 5 விக்கெட்டுக்களையும் பிரதீபன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

யாழ். இந்து அணி தனது முதல் இனிங்ஸில் 215 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுக்களையும் இழந்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

ஜெயராஜ் 127, ஆர். வரதன் 13, கபிலன் 22, வரதன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். றொபின்சன் 3 விக்கெட்டுக்களையும் பிரபுராம் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய ஸ்கந்தவரோதயா அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 56 ஓட்டங்களையே பெற்றது. மதியழகன் 21, சந்திரகுமார் 16 ஓட்டங்களைப் பெற்றனர். நரேந்திரன் 6 விக்கெட்டுக்களையும் வரதன் ஜெயதீபன் பிரதீபன் மூவரும் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (42)

## கர பந்தாட்ட போட்டி

(கொழும்புத்துறை)

எதிர் வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இவ்வருடம் தேசிய சேவை இளைஞர் மன்றம் நாடளாவிய ரீதியில் கர பந்தாட்டப் போட்டிகளை நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு இளைஞர் கழகங்கள் இது தொடர்பாகத் தமக்குத் தேவையான சகல விபரங்களைத் தமது பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளும் படிஅறிவிக்கப்பட்டுள்ளது. (24)

# குருநகர் பாடும்மீன் கழகம் சம்பியனாகத் தெரிவானது

(யாழ் விளையாட்டு நிருபர்)

யாழ். உதைபந்தாட்ட லீக் விளையாட்டுக் கழகங்களிடையே நடத்தி வந்த உதைபந்தாட்ட ''கொக்கஸ்ட்'' போட்டியில் குருநகர் ''பாடும்மீன் விளையாட்டுக்கழகம் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

''பாடும்மீன்'' விளையாட்டுக் கழகத்திற்கும் யாழ். முஸ்லிம் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் சம்பியன் மோதல் இடம் பெற்றது.

இப்போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு கோஷ்டிகளும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் மிகவும் சிறப்பாக விளையாடினர். போட்டி விறுவிறுப்பாக இருந்தது.

யாழ். முஸ்லீம் விளையாட்டுக் கழகத்தின் கோல் காப்பு வீரர் முனாஸ் மிகவும் சிறந்த முறையில் பாடும்மீன் அடித்த உதைகளைத் தடுத்து நிறுத்தினார்.

இரு கோஷ்டிகளும் கோல் போடும் சந்தர்ப்பங்களை நழுவ விட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இடை வேளையின் பின்பு ஆட்டம் உச்ச கட்டத்தில் அமைந்தது. ஆட்டம் முடிவடைவதற்கு 15 நிமிடங்கள் இருக்கும் போது ''பாடும் மீன்'' வி. கழகம் ஒருகோலைப் போட்டது. இதன் பின் யாழ். முஸ்லிம் வி. கழகம் சிறப்பாக விளையாடிய போதும் பாடும் மீன் பின்னணி வீரர்கள் எதிர்த்து அவர்களின் உதைகளைத்தடுத்தனர்.

பாஷையூர் சென் அன்ரனிஸ் கழகம் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. எஸ். அன்ரனிப்பிள்ளை மத்தியஸ்தம் வகித்தார். (42)


சங்கானை ப. நோ. கூ. சங்கம் (வ.உ)

புதிய லொறிச் செசிக்கு பொடி அடிக்க

## கேள்வி விண்ணப்பம்

சங்கானை ப. நோ. கூ. சங்கத்திற்கு சொந்தமான புதிய 7 தொன் இசுசு லொறிச் செசிக்கு பொடி அடிப்பதற்கும், பெயின்ற் வேலை செய்வதற்கும் கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. லொறிச் செசியை வேலை நாட்களில் சங்கத்தில் காலை 8 00 மணி முதல் மாலை 5. 00 மணி வரை பார்வையிடலாம்.

விண்ணப்பம் செய்வோர் சங்கத்தில் ரூபா 25/- செலுத்தி விண்ணப்பப் படிவம் பெற்றுக் கொள்ளலாம். அரக்கு முத்திரை இடப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் ''தலைவர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை'' என விலாசமிடப்பட்டு கடித இடது பக்க மேல் மூலையில் ''லொறி பொடி அடித்தல்'' என எழுதி 18-4-90 பி. ப. 3-00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப் படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்
சங்கானை.

3 - 4 - 90.

(B / 584)


## மீண்டும் வங்கி

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் பிரதி செவ்வாய்க்கிழமைதோறும் இயங்கி வந்த இலங்கை வங்கியின் கருமபீடம் மீண்டும் 03ம் திகதி முதல் தெல்லிப்பழையில் செவ்வாய்க்கிழமை தோறும் செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை வங்கி சுன்னாகம் கிளை முகாமையாளர் தெரிவித்தார்.

கடந்தமார்கழி, தை மாதங்களில் இப்பகுதியில் நிலவிய சூழ்நிலைகளினால் இலங்கை வங்கி சுன்னாகம் கிளையால் நடாத்தப்பட்ட இக்கருமபீடம் தற்காலிகமாக மூடப்பட்டதாகக் கூறிய அவர் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ள இக்கருமபீடத்தில் வாடிக்கையாளர்கள் சிறுவர் சேமிப்புக் கணக்குகள், சேமிப்புச் சான்றிதழ்கள், சேமிப்புக் கணக்குகள், நிலையான வைப்புக் கணக்குகள் என்பனவற்றைத் திறக்க முடியும் என்றார்,

சுன்னாகம் இளை வங்கி அதிகாரி திரு. எஸ் குமாரசாமி இக்கருமபீடத்தின் பொறுப்பதிகாரியாகச் செயற்படுகின்றார். (26)

## நினைவுத்தூபி

(கோண்டாவில்)

இது நாள் வரை தமிழீழ மண்ணுக்காய் போராடி வீர மரணம் அடைந்த விடுதலைப் புலிகளின் ஞாபகார்த்தமாக பொற்பதி ரோட் அப்பத்தள என்னுமிடத்தில் நினைவுத் தூபி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

கொக்குவில் கிழக்குநேதாஜி சனசமூக நிலையத்தினரால் அமைக்கப்பட்டு வரும் இந்த நினைவுத் தூபிக்கு ஏறக்குறைய 25 ஆயிரம் ரூபா செலவிடப் படவுள்ளது.

இதேவேளை நேதாஜி சனசமூக நிலையத்திற்கான புதிய கட்டிடமொன்றும் நினைவுத் தூபிக்கு அருகில் அமைக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (34)

வேலணை பிரதேச சபைக்குள்

# கட்டடங்கள் கட்டுவதற்கு முன் அனுமதி பெற வேண்டும்

(வேலணை)

வீடு நகர சீர்திருத்தச் சட்டத்தின் பிரகாரம் வேலணை பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்ட வரியிறுப்பாளர்கள் புதிதாக வீடுகள், சுற்றுமதில்கள், கட்டிடங்கள், மலசலகூடங்கள், தற்காலிக கொட்டில்கள் என்பனவற்றை அமைத்துக் கொள்ள வேண்டுமாயின் இனிமேல் வேலணை பிரதேசசபையின் விசேட ஆணையாளரிடம் முன் அனுமதி பெறவேண்டும்.

அவ்வாறு அனுமதி பெற்றுக் கொள்ளாமல் அமைக்கப்படும் மேற் கூறப்பட்ட கட்டிடங்கள் யாவும் உடனடியாக அழிக்கப்படுவதுடன் சம்பந்தப்பட்டவருக்கெதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. (14)


தியாக தீபம் அன்னை பூபதிக்கு
தீவகமக்கள் சார்பில் எமது அஞ்சலிகள்



விவசாய அபிவிருத்திச் சங்கம்

நாரந்தனை. (R,77)



தியாக தீபம்
அன்னை பூபதியின் நினைவாக
எமது நினைவு அஞ்சலிகள்



சி. கார்த்திகேசு



தியாகச்சுடர்
அன்னை பூபதிக்கு
தீவக மக்கள் சார்பில்
எமது அஞ்சலிகள்





அன்னை பூபதிக்கு
எமது கண்ணீர் அஞ்சலி



சி. கார்த்திகேசு

## விஜிதா ஸ்ரோர்ஸ்

வேலணை தெற்கு,
வேலணை. (R/71)



தியாகச் சுடருக்கு எமது அஞ்சலி!



## சுமங்கலி

16, நவீன சந்தை,
சாவகச்சேரி.

(B/516)





அந்நியர் ஆட்சியின் அடிமை விலங்கை
உடைத்தொரு ஈழம் அமைத்திட எண்ணி
புறப்பட்ட வேங்கையின் புனிதப் பாதையின்
மறத்தமிழ் மங்கையாம் அன்னை பூபதி!

அண்ணல் காந்தியின் அகிம்சை வழிதனில்
தன்னையே கொடுத்து தமிழ் ஈழம் அமைக்க
எண்ணிய அன்னையின் இறுதிநாள்தனை
ஏற்றித் துதித்தல் எங்கள கடமையே!

சிறைப்பட்டு தமிழினம் சீர்கெட்டு அழிவதை
பொறுத்திட மாட்டேன் பொங்கி எழுந்திட
புறப்படு தாய்க்குலம் என்று முழங்கிய
மறத்தமிழ் அன்னையின் வழிதனை மறவோம்!

வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்திடும் தமிழனின்
சுதந்திர ஈழம் துரித கெதியில்
மலர்ந்திட வேண்டும் மாண்டே அகற்கு
வழிதனை அமைத்து தாயினை மறவோம்!

வீரவேங்கையின் விடியும் பொழுது
வீரம் படைத்த தமிழீழம் தனிலே
காண எண்ணும் கனவினை நனவாய்
காட்ட நினைத்த தாய்தனை மறவோம்!

பொங்கி எழுந்தது சிறுத்தைகள் கூட்டம்
புலம்பி அழுதனர் அவர் தம் நிலையை
அன்னையின் வழிதனை அகலோம் நாமே
அதன் வழி ஈழம் அமைத்திட முயல்வோம்!

நன்றி

**வேலணை பல நோ. கூ. சங்கம்,**
**வேலணை.** (B.590)



### எமது கண்ணீர் அஞ்சலி



அன்னை தமிழுக்காய் ஓர் தீபம் அணைந்தது
ஆக்கிரமிப்பாளருக்கெதிராய் ஒரு மெழுகுவர்த்தி
தனை உருக்கிமாய்ந்தது
விண்ணும், மண்ணும் ஏன் இந்த வையமுமே
வியக்கும் வண்ணம்
எண்ணித் துணிந்தான் தியாக தீபம் திலீபன்!
அவன் வழியே
மீன்பாடும் தேன்நாட்டில் தான் வாடி உயிர் நீத்தாள்!
ஏன்
எமக்காய், எம் மண்ணுக்காய், எம்மொழிக்காய்
எம் பரம்பரைக்காய்
அவள்தான் மனிதருள் மாணிக்கம்
மாதா அன்னை பூபதி

## அம்மாதாவை ஓராண்டின் பின் நினைக்கின்றோம்.



**தீவக மக்கள் சார்பாக**
காரைநகர் அம்மாள் கிராமியக்
கடற்றொழில் அபிவிருத்தி
அமைப்பு உறுப்பினர்கள்
(R 74)



## குதூகல ஆரம்பம்

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு சகலவிதமான ஆங்கில மருந்துகள், பிளாஸ்ரிக் (Plastic) பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், சில்வர் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள் இவை யாவும் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

## லிங் பார்மஸி & குறோசரீஸ்

காங்கேசன்துறை வீதி,
தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். (B/567)

சிந்தனைக்கு

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு

- திருக்குறள்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 05 - 04 - 90

## விஷத்தை விட கொடியது

ஆலகால விஷம் கூட சில சமயங்களில் கெடுதி இல்லாமல் போய்விடும். ஆனால் விஷமம் மிகப் பயங்கரமானது.

கல்முனையில் வாழைப் பழக்கடைக்குள் வாழைச் சருகுகள் நன்றாகக் காய்ந்துபோய்க் கிடந்தன.

புகையூட்டப்பட்ட நெருப்பு இந்தச் சருகுகளில்பட்டு வாழைப் பழக்கடையும் அதன் அருகேயிருந்த சில கடைகளும் தீப்பிடித்துச் சேதமடைந்தன.

தீயை அணைப்பதில் பொதுமக்களும் போராளிகளும் சேர்ந்து பாடுபட்டனர் என்பதை கல்முனை மக்கள் நன்கறிவர்.

கொழும்பிலுள்ள பத்திரிகை நிறுவனம் ஒன்றின் பத்திரிகைகள் கல்முனையில் முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான கடைகளுக்கு ஆயுதந்தாங்கிய இளைஞர்கள் சிலர் தீ வைத்தனர் என்று செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தப் பத்திரிகை நிறுவனம் வெளியிடும் பத்திரிகைகள் எப்பொழுதுமே நல்லதைப் பார்ப்பதில்லை, நல்லதைச் சொல்வதுமில்லை!

கிழக்கு மாகாணத்தில் இப்பொழுது நிலைமை சீராகி தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஏன் சிங்கள மக்களும்கூடப் பிரச்சினையில்லாமல் அமைதியாகவும் சந்தோஷமாகவும் வாழ்வது சிலருக்குப் பிடிக்கவில்லை.

அரசியல்வாதிகளில் மட்டுமல்ல சில பத்திரிகைகள் தான் சிங்களப் பேரினவாதத்தை இங்கு பேணிப் பாதுகாத்து வளர்த்து வருகின்றன.

ஆசியாவின் சுவிட்சர்லாந்தாக சொர்க்க பூமியாக விளங்கிய இலங்கைத் தீவை நரபலிக்களமாக நாசமாக்கியதில் கொழும்பிலுள்ள பத்திரிகை நிறுவனங்கள் சிலவற்றுக்கு அதிக பங்கு உண்டு.

தமிழரும் முஸ்லிம்களும் மதத்தால் வேறுபட்டாலும் இனத்தால் ஒன்றுபட்டவர்கள் என்பதற்கு 1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கைப் பாராளுமன்றத்தில் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா சிங்களம் மட்டுமே இந்நாட்டின் உத்தியோக மொழி என்ற மசோதாவைக் கொண்டுவந்தபோது வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்த தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகளில் ஒருவர்கூட அந்த மசோதாவை ஆதரித்துப் பேசவும் இல்லை, ஆதரித்து வாக்களிக்கவுமில்லை. மாறாக அனைவரும் ஒற்றுமையாக நின்று எதிர்த்தே வாக்களித்தனர்.

# விடுதலைப் போராட்டத்தில் அழியா இடம்பெற்ற அன்னைபூபதி

**தமிழினியவன்**
(மட்டக்களப்பு செய்தியாளர்)

> அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் ஓராண்டு நினைவு அஞ்சலி தமிழீழ தாயகத்திலும், சர்வதேச ரீதியில் வாழும் தமிழர்களாலும் தற்போது அனுஷ்டிக்கப்படுகிறது. அன்னையின் தியாகத்திற்கு அஞ்சலியாக இக் கட்டுரையை இங்கு வெளியிடப் பெறுகின்றது.

"தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நிபந்தனை யற்ற யுத்த நிறுத்தம்''

''தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை''

மேற்படி கோரிக்கைகளை முன்வைத்து அன்று தன் உயிரைத் தியாகம் செய்த அன்னைபூபதி கணபதிப்பிள்ளை உயிர் நீத்து இரண்டு ஆண்டுகளாகி விட்டன.

தமிழ் பேசும் மக்களின் நல் வாழ்விற்காக தன்உயிரை தியாகம் செய்த தியாகிகள் வரிசையில் அன்னை பூபதியும் இடம் பெற்று விட்டார்.

அன்னை பூபதி ஈழத்தமிழ் பேசும் மக்களின் விடுதலை போராட்டவரலாற்றில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் அழியாத இடத்தைப் பெற்று விட்டார்.

1939 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி மட்டக்களப்பு கறுவப்பன்கேணி என்னுமிடத்தில் சாதாரண குடும்பமொன்றில் பிறந்த அன்னை பூபதியின் கணவர் புகையிரத திணைக்களத்தில் ஊழியராக தற்போது ஓய்வூதியம் பெறுகிறார். அன்னை பூபதியின் உயிர்தியாகம் மூலம் அக்குடும்பம் இலட்சிய குடும்பமாக இன்று திகழ்கின்றது.

அன்னை பூபதிக்கு 4 பிள்ளைகள். இரு ஆண் பிள்ளைகள் ஸ்ரீலங்கா படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இரு பெண்பிள்ளைகள் திருமணமாகி விட்டனர். இரு பேரப்பிள்ளைகள் உண்டு.

சர்வதேச ரீதியில் உண்ணாவிரதபோரில் உயிர்த்தியாகம் செய்த 13 பேரில் அன்னை பூபதி 13 ஆவது இடம் வகித்தாலும் சர்வதேச ரீதியில் முதல் பெண்மணி என்ற பெருமைக்குரியவராவார்.

வட அயர்லாந்து கத்தோலிக்கப் புரொட்டஸ்தான் ஆதிக்கம், பிரித்தானிய அரசிடமிருந்தும் விடுதலைகோரி 1969 இல் போராட்டம் ஆரம்பித்தனர்.

இப்போராட்டத்தின் எதிரொலியாக கெரில்லா தலைவர்கள் பலர் பிரித்தானியா அரசினால் சிறையில் அடைக்கப்பட்டனர்,

சிறையில் அரசியல் அந்தஸ்துத்கோரி சிறையில் பொபிசான்ட்ஸ் உண்ணாவிரதம் ஆரம்பித்து 17 ஆம் நாள் உயிர் இழந்தார். ஏனையோர் இப்போராட்டம் ஒருவர் பின்பு ஒருவராகத் தொடர்ந்து 7 மாதங்களில் மேலும் 10 பேர் உயிர்த்தியாகம் செய்தனர்.

எமது நாட்டில் சிலர் இப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இடையில் கைவிட்டுள்ளார்கள் என்பது எமது கடந்தகால அரசியல் வரலாறுகள் காட்டுகின்றன.

ஆனால் இலங்கை இந்திய ஒப்பந்தம் வந்த பின்பு இருவர் இப்போராட்டத்தில் ஈடுபட்டு தம் உயிரை தியாகம் செய்துள்ளார்கள் என்பதை தமிழ் பேசும் உலகம் மறந்துவிடவில்லை.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கும் என தெரிவிக்கப்பட்டது. உண்மையில் பாதுகாப்பு வழங்கும் ஒப்பந்தமாக இருந்திருக்குமானால் இவ் இரு தியாகிகளை தமிழினம் இழந்திருக்கமாட்டாது.

மேலும் பல போராளிகள், இலட்சியவாதிகள், புத்திஜீவிகளை இழந்திருக்கமாட்டாது கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிந்திருக்கமாட்டாது.

★ அரசியல் கைதிகள் சகலரும் உடனடியாக விடுதலை செய்யப்படல் வேண்டும்.

★ சிங்களக்குடியேற்றங்கள் நிறுத்தப்படல் வேண்டும்.

★ இடைக்கால அரசு அமையும் வரை மீளக்குடியமர்வு நிறுத்தப்படல் வேண்டும்.

★ பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படல் கூடாது.

★ வடகிழக்கு மாகாணங்களில் ஸ்ரீலங்காபடை முகாம்கள் வாபஸ் பெறப்படல் வேண்டும்.

மேற்படி 5 கோரிக்கைகள் முன்வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் போராளி திலீபன் செப்டம்பர் 15 இல் சாகும் வரை உண்ணாவிரத களத்தில் குதித்து 12 ஆம் நாள் உயிர்த்தியாகம் செய்தான்.

திலீபனின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாமல் அலட்சியப்படுத்தப்பட்டன.

பாதுகாக்க வந்ததாக கூறியவர்கள் பார்த்துக் கொண்டு நின்றார்கள். காரணம் அவர்களின் நோக்கம் தமிழின மக்களின் விடுதலை, பாதுகாப்பு அல்ல. தங்களின் நலனும் சுயநலபோக்கும்தான்.

தமிழ்பேசும் மக்கள் இந்திய படையின் வருகையால் தமது பாதுகாப்பு கிடைத்துவிட்டது என்ற மயக்கத்தில் இருந்தார்கள்.

போராளி திலீபன் மறைவு மூலம் மக்கள் மயக்கம் தெளிய ஆரம்பித்தது. குமரப்பா, புலேந்திரன் உட்பட 11 போராளிகள் உயிர்த்தியாகம் மூலம் மயக்கம் முற்றாக தெளியவைக்கப்பட்டது.

இந்நிலையில் அமைதியற்ற சூழ்நிலை உருவாகியது. தமிழீழ விடுதலைப் புலிகள் தான் தமிழ் மக்களை பாதுகாக்க கூடியவர்கள் என்பதை தமிழ் பேசும் மக்கள் புரிந்துவிட்டார்கள்.

எமது பாதுகாப்பு எம்மால் தான் உறுதிப்படுத்திக்கொள்ளமுடியும். என்ற உறுதிப்பாடு மக்களிடம் அழியாத இடத்தைப் பிடித்துவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இந்தியபடை ஆயுத களைவு என்ற போர்வையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. இதனால் தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள், துயரங்கள் ஏராளம்.

இந்நிலையில்தான் அமைதியான சூழ்நிலை உருவாக வேண்டுமென்பதற்காக மட்டக்களப்பில் அன்னையர் முன்னணியினால் 1988 பெப்ரவரி 13ஆம் திகதி இரு அம்சக் கோரிக்கை ஒருவார கால அவகாசத்துடன் சுழற்சி முறை உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்திய அரசு இதனை ஏற்க மறுத்துவிட்டது. ஒரு வார கால அவகாசம் முடிந்துவிட்டது.

19ஆம் திகதி திருமதி அன்னம்மா டேவிட், திரு. நேசம்மா வடிவேல் ஆகியோர் சாகும் வரையிலான உண்ணாவிரத களத்தில் குதித்தனர்.

மார்ச் 3ஆம் திகதி 15ஆம் நாள் தமிழீழ விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டதன் பிரகாரம் நேசம்மா வடிவேல் வாபஸ் பெற்றார், அன்னம்மா டேவிட் தொடர்ந்தார்.

அன்னம்மா டேவிட் நிலை கவலைக்கிடமாக இருந்தது. பிரஜைகள் குழு, சாந்திசேவா சங்கம், தொழிற் சங்க சம்மேளனம் போன்றன இப்போராட்டம் நியாயமானது ஏற்றுக்கொள்ளுங்கள் என இந்திய அரசை வற்புறுத்தின.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்சுற்றி எழுதுவது

ஸ்ரீராமருக்கு பரதன் ஒரு தம்பி!

பதினான்கு ஆண்டு காலம் ஸ்ரீராமர்வனவாசம் செய்த போது ஸ்ரீராமனின் பாதுகைகளை (பாதணிகளை) அரண்மனையில் சிம்மாசனத்தில் வைத்து பரதன் பூஜை செய்தான் என்று இராமாயணக் கதைகளில் படித்திருக்கிறோம்; கதாப்பிரசங்கங்களில் கேட்டிருக்கிறோம்.

ஆனால் பரதனுக்குப் பின்னே பல பரதன்கள் தோன்றக் கூடுமென்று படித்ததாகவோ கேள்விப்பட்டதாகவோ எனக்கு நினைவில்லை!

ஸ்ரீராமரின் தம்பி பரதன் அண்ணாவின் ஒரு சோடி பாதுகைகளைத்தான் தலைமேற் சுமந்து சென்றான்.

அவன் வழித் தோன்றல்களாக இன்று தினம் தினம் உருவெடுக்கும் பரதன்கள் ஸ்ரீராமருடைய கோயில்களில் மட்டுமல்ல சகல கோயில்களிலும் பாதணிகளை நைஸாக சுமந்து சென்று விடுகிறார்கள். கோயில்களில் மட்டும் தானா? கலியாண வீடுகளிலும் மரண வீடுகளிலும் கூட பாதணிகளைப் பரதன்கள் பவ்வியமாகத் தூக்கிச் சென்று விடுகிறார்கள்!

தமிழ் நாட்டில் ஆலயங்களுக்கு வெளியே பாதணிகள் பாதுகாப்பு நிலையங்களைத் தேவஸ்தானமே நடத்தி வருகின்றன.

மதுரையில் திருப்பரங்குன்றத்தில் மலை அடிவாரத்திலேயே பாதணிகள் பாதுகாப்பு நிலையம் இருக்கிறது. பாதணிகளை கழற்றிவிட்டு இலக்கத் தகடுகளை வாங்கிக் கொண்டு போக வேண்டும். திரும்பி வந்து இலக்கத் தகட்டையும் முப்பதுபைசாவையும் கொடுத்து பாதணிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியது தான்.

இந்தநிலையத்தின் மீது ஒரு பலகையில் கடந்த வருடம் பாதணிகள் பாது

# தமிழீழ மக்களிடம் புதிய

குழுவாகச் சேர்ந்தோ, அன்றேல் தனியாகவோ இவ் ஆய்

தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகளில் ஒருவர்கூட அந்த மசோதாவை ஆதரித்துப் பேசவும் இல்லை, ஆதரித்து வாக்களிக்கவுமில்லை. மாறாக அனைவரும் ஒற்றுமையாக நின்று எதிர்த்தே வாக்களித்தனர்.

ஆனால் சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகளைத் திசை திருப்பி இந்நாட்டில் வகுப்புவாதத் தீயை வளர்த்துவிட்ட ''பெருமை'' சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகளையே சாரும்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் மோதலை ஏற்படுத்துவதில் இலங்கைப் படைகளுக்கும் போராளிகளுக்குமிடையில் நடைபெற்ற போராட்ட சமயத்தில் ''வீடு கொளுத்துகிற இராசாவுக்கு நெருப்பு எடுத்துக் கொடுக்கிற மந்திரி மாதிரி'' சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகள் தூண்டுகோலாக இருந்தன.

இலங்கைப்படையின் அட்டூழியங்களையோ இந்தியப் படைகளின் அட்டூழியங்களையோ கொழும்புப் பத்திரிகைகள் கண்டிக்க முன் வந்ததில்லை.

இந்தியப்படை தன்னுடன் கூட்டி வந்த கையாட்கள் கடைசி நேரத்தில் செய்த அட்டூழியங்களைக்கூட இந்தப் பத்திரிகைகள் கண்டித்ததில்லை.

இப்பொழுது தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழ்வது சிங்களப் பேரினவாதிகளுக்குப் பிடிக்கவில்லை.

எப்படியாவது குழப்பி கலகத்தைக் கிளப்பி இலாபந்தேட முனைகிறார்கள்.

முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் எச்சரிக்கையாகவும் விழிப்புடனுமிருக்க வேண்டியது அவசியம்.

வடமராட்சி கிழக்கில்

## இரண்டு பாடசாலைகளுக்கு முறைசாராக்கல்விஅறிமுகம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சிகிழக்கில் உள்ள இரண்டு பாடசாலைகளில் முறைசாராக்கல்வி அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

பருதங்கேணி, இந்து தமிழ் கலவன் பாடசாலையிலும், குடத்தனை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையிலேயே முறைசாராக் கல்வி வகுப்புக்கள் இரண்டு வாரத்திற்குள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் வெளியிணைப்பு திருத்துதல் வகுப்பும் குடத்தனை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் தும்பு வேலை வகுப்பும் நடத்தப்படவுள்ளன.

முறைசாராக் கல்வியினைப் பெற விரும்புபவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் முடிவடைந்துள்ளன. (36)

# தமிழீழ மக்களிடம் புதிய சிந்தனைகள் ஏற்பட வேண்டும்

### மக்கள் மடல்

ஆசிரியர்
ஈழநாதம்,

சமுதாயத்தின் அடிப்படை மாறுதல் புதிய சிந்தனைகளாலும், புதிய சிந்தனைகளால் மலரும் புதிய சமுதாயத்தாலுமே ஓரளவு ஏற்படுகிறது.

ஈழத்தமிழினம் இன்று புதிய சமுதாயத்தை நோக்கிச் செல்ல வேண்டியுள்ளது. அப்படிச் செல்லும் போது புதிய சிந்தனைகளைத் தோற்றுவிக்கும் முயற்சியிலும் ஈடுபட வேண்டும்.

சாதி அமைப்புத் தகர வேண்டும், மத, பிரதேச வேறுபாடுகள் தமிழீழத்தில் மறைய வேண்டும் சீதனம் ஒழிய வேண்டும் என்பன போன்ற முற்போக்குக் கருத்துக்கள் ஏற்கனவே வளர்ந்து வருகின்றன. நம்மக்களிடம் ஒற்றுமை ஏற்படாவிடின் தமிழ் தேசிய இனம் முன்னேற முடியாது, விடுதலை பெற முடியாது என்பதை இன்றைய இளைஞர்கள் பூரணமாக உணர்ந்துள்ளனர். இவற்றிற்கான அடிப்படைக் காரணங்களையும் நாம் அலசிஆராய வேண்டும்.

ஒவ்வொருவரின் சிந்தனையும் சுற்றாடலினாலும் பொருளாதார அமைப்பினாலும் சிறு வயதிலிருந்தே பதப்படுத்தப்படுகின்றது .எம்மிடையே ஏற்படும் தீய சிந்தனைகளுக்கு எவ்வாறு சுற்றாடலும், பொருளாதார ஏற்றத் தாழவுகளும் பொறுப்பாக இருக்கின்றனவோ அவ்வாறே சாதி வேறுபாடுகளுக்கும் பிரதேச வேறுபாடுகளுக்கும் இவை காரணமாக அமைகின்றன. எனவே கலப்புத் திருமணங்களும் ,சமபந்திப் போசனங்களும் நடந்தால் மாத்திரம் இவ்வேறுபாடுகள் மறைந்து விட மாட்டா.அடிப்படைப் பொருளாதார மாற்றங்களினால் தான் சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளை நீக்க முடியும்.

இத்தகைய அடிப்படைப் பொருளாதார மாற்றங்களை நாம் செய்ய முடியாமலிருப்பதற்குக் காரணம் அரசியல் அதிகாரம் தமிழ் தேசிய இனத்தின் கையில் இல்லாமையினால் தான் என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். சுதந்திரமும் அரசியல் அதிகாரமும் எமது கையில் வந்தால் தான் இவ்வேறு பாடுகளை நாம் அகற்ற முடியும். இதனை நன்குணர்ந்து சுதந்திரம் பெறத் துடிப்பவர்களுடன் அனைவரும் இணைய வேண்டும். இதனைப் பலரும் இன்று உணர்ந்து வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்

உலகின் சனத்தொகையில் அரைவாசிக்கு மதிகமானவர்கள் பெண்களாவர். இன்று பெண்கள் புதிய பொறுப்பினை ஏற்றுப் புதிய சமுதாயத்தினைப் படைக்கும் பொறுப்பில் ஆண்களுக்குத் தாம் சளைத்தவர்களில்லை என்பதனை நிரூபித்து வருகின்றனர். ஈழத்திலும் பெண்கள் அதிக அளவில் அரசியல், பொருளாதார, சமூகவிடயங்களில் பங்கெடுக்க வேண்டும். தமிழீழச் சுதந்திரப் போராட்டத்தில் பெண்கள் பங்கெடுக்காவிடின் நாம் எமது பலத்தில் அரைவாசியை இழந்தவர்களாவோம். தமிழ்ப்பெண்கள் அரசியல் ,பொருளாதார,சமூக சம்பந்தமான நூல்களை அதிக அளவில் வாசிக்க முன்வர வேண்டும்.

கணவனை மகிழ்விப்பது, குழந்தைகளை வளர்ப்பது, சமைப்பது போன்றவை மாத்திரந்தான் வேலையென எண்ணுவது சமுதாயத்தினை மாற்றியமைப்பதும் தமது கடமைகளில் ஒன்றென எண்ண வேண்டும். பெண்கள் நினைத்தால் கோழையையும் வீரனாக்க முடியும்.

மூளைபலம் இல்லாத ஒரு சமுதாயம்விடுதலைபெறவோ அன்றேல் முன்னேறவோ முடியாது. ஏற்கனவே திறமைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள தமிழ் சமுதாயம் மென்மேலும் புதிய ஆராய்ச்சிகளைச் செய்யவேண்டும்.

சரித்திரம் படிக்கும் மாணவர்கள், மற்றும் சரித்திர அறிவுள்ளவர்கள ஈழத் தமிழர்களின் சரித்திரத்தை நன்கு ஆராயவேண்டும். பொருளாதார நிபுணர்கள் ஈழத்தின் தற்போதைய பொருளாதார வளம் பற்றியும், எதிர்காலத்தில் எவ்வாறு ஈழத்தை வளம் படுத்த முடியும் என்பது பற்றியும் பல நூறு கட்டுரைகளை எழுதவேண்டும். அரசியல் நிபுணர்கள் ஈழத்தின் அரசியல் நிலை பற்றியும், எதிர்காலம் பற்றியும் மக்களுக்கு எவ்வாறு அரசியல் அறிவைப் பெருக்குவது, மக்களுடைய மனோபாவம் எப்படிப் பட்டது என்பது பற்றியும் நூல்கள் வெளியிட வேண்டும்.

பொறியியலாளர்களும், விஞ்ஞானிகளும் ஈழத்தை எவ்வாறு நவீன நாடாக்குவது, எவ்வாறு விஞ்ஞானத்தில் மேம்படச் செய்வது என்பது குறித்து ஆராய்ச்சிகள் நடாத்தவேண்டும். இதில் அக்கறையுள்ளவர்கள் போகுமிடமெல்லாம், பேசும் நேரமெல்லாம் இப்புதிய ஆராய்ச்சிகளில் கவனம் செலுத்த வேண்டும். ஈழமெங்கும் ஒரு குழுவாகச் சேர்ந்தோ, அன்றேல் தனியாகவோ இவ் ஆய்வுகளை உடனடியாகத் தொடங்க வேண்டும். இவ் விடயத்தில் சங்கங்கள், கழகங்கள், பத்திரிகைகள்யாவையும் கவனஞ் செலுத்த வேண்டும். இளைஞர்கள் தம்மிடையே பட்டி மன்றங்கள் நடத்த வேண்டும்.

புதிய ஆராய்ச்சிகள் தமிழ் மக்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்கவும், அறிவை ஊட்டவும் உதவும். புதிய சமுதாயத்தின் முன்னேற்றம் புதிய சிந்தனைகளிலே ஓரளவு தங்கியுள்ளது மறுக்க வொண்ணா உண்மையாகும்.

ஈழத்தில் 80 வீதத்திற்கு அதிகமானவர்கள் விவசாயிகள். இவர்களிடையே நாம் விடுதலைக் கருத்துக்களையும் புதிய சிந்தனைகளையும் பரப்பாவிடில் என்றுமே எமக்கு விடிவில்லை.

எனவே வேலையின்றியிருக்கும் இளைஞர்கள் கிராமங்களில் விவசாயிகளுடன் இரண்டறக் கலந்து புதிய சிந்தனைகளைப் பரப்ப வேண்டும்.

புதிய ஆராய்ச்சிகள் நடத்துகிறவர்கள் மீனவர்களுடன், விவசாயிகளுடன், சிறுபான்மைத் தமிழ் மக்களுடன் இரண்டறக் கலப்பார்களானால் அவர்களுடைய அன்றாடப்பிரச்சினைகளை நேரில் அறியமுடியும். புத்தக வாயிலாகத் தீர்வுகள் கண்டு பயனில்லை. அவை நடைமுறையில் பயன்படவேண்டுமானால் மக்களுடன் நேரில் பழகி அதனை ஆராய்ச்சிகளுடன் தொடர்புபடுத்த வேண்டும்.

வேலையற்றவர்கள் விவசாயத்தையோ, மற்றும் தொழில்களையோ முழு நேரமாக எடுத்து மக்களுக்கு அறிவை ஊட்டிட வேண்டும். ஏனையோர் விடுதலைக் காலங்களில் கிராமமக்களுடனே வசித்து அவர்களுடைய பிரச்சினைகளை அறிய வேண்டும்.

இவ்வாறான புதிய எண்ணங்கள், புதிய ஆராய்ச்சிகள், பொது மக்களுடன்

(6-ஆம் பக்கம் பார்க்க)

இந்நிலையிலதான் மீ ஒரு பலகையில் கடந்த வருடம் பாதணிகள் பாதுகாப்பு மூலம் தேவஸ்தானத்துக்குக் கிடைத்த இலட்சத்துக்கு மேற்பட்ட வருவாயின் விபரம் எழுதப்பட்டிருக்கிறது.

கொழும்பிலும் கொட்டாஞ்சேனை முத்துமாரியம்மன் கோயில், ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் போன்றவற்றில் பாதணிகள் பாதுகாப்புக்கு வசதி செய்துகொடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ். நகரிலும் ஒரு கோயில் அறங்காவலரிடம் பாதணிகள் பாதுகாப்புக்கு ஒழுங்கு செய்தால் தேவஸ்தானத்துக்கும் வருமானம் வரும். வேலையற்ற ஒருவருக்கு சிறிது வருமானம் வருமேயென்று கேட்டேன். 249 ரூபாய் 90 சதத்துக்குப் பாதணி வாங்குபவர் அதைப்பாதுகாப்பதற்குஒரு ரூபாய் கொடுக்கத் தயங்க மாட்டார் என்றும் சொன்னேன்.

''ஊர்சுற்றி சொல்வது சரிதான். ஆனால் பாதணிகள் பாதுகாப்பதற்குத்தான் ஒருவரும் முன்வருகிறார்களில்லை. கௌரவப்பிரச்சினை,' என்றார் அறங்காவலர்!

பட்டப் படிப்புப் படித்தவர்களெல்லாம் கூட வெளிநாடுகளில் போய் ஏதோவெல்லாம் செய்கிறார்கள் இங்கு பாதணிகள் பாதுகாப்பது கூட கேவலமாகிவிட்டது.

பரவாயில்லை பரதன்கள் வளரட்டும்!

ஈழநாதம்

# வடமாகாண மக்கள் வங்கிகளில் அடைவு நகைகள் மீளளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஸ்ரான்லி வீதி, யாழ் பிரதான வீதி, புங்குடுதீவு, கன்னாதிட்டி, சங்கானை' யாழ் நவீன சந்தை, சாவகச்சேரி, பளை ஆகிய கிளைகளில் அடைவு வைத்து, கடந்த வருடம் செப்ரம்பர் மாதமளவில் மீளப் பெறுவதற்காக பணம் செலுத்தியவர்களது நகைகள் தவிர்க்க முடியாத காரணங்களினால் இன்னமும் வந்து சேரவில்லை. இந்நகைகள் இன்று வந்துசேரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நகைகள் வந்ததும் பத்திரிகை விளம்பரங்கள் மூலமாக நகைகளை வழங்கும் திகதிகள் பற்றிய விபரங்கள் அறிவிக்கப்படும்.

இத்தினங்களில் யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து நகைகள் உரிமையாளர்களுக்கு மீளளிக்கப்படும். உரிய தினத்தில் நகைகளைப் பெறாத சகல யாழ். மாவட்ட வாடிக்கையாளர்களுக்கும் இம்மாதம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். பொலிஸ் நிலையத்தில் மீளளிக்கப்படும் நகைகளைப் பெறாதவர்களுக்கு வங்கிக் கிளையினால் தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்படும்.

பரந்தன் கிளையில் நகை மீளப் பெறாதவர்கள் இம்மாதம் 20.4 90 வெள்ளிக்கிழமை நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். கிளிநொச்சிக் கிளையில் நகைகளைப்பெறாதவர்கள் இம்மாதம் 24 4.90 செவ்வாய்க்கிழமை நகைகளை பெற்றுக் கொள்ளலாம்.

மன்னார் மாவட்டக் கிளைகளில் அடைவு வைத்து மீளப் பெறுவதற்காக 21.9.89 முன்னர் மீளப்பெறுவதற்குப் பணம் செலுத்தியவர்களின் நகைகள் மன்னார்க் கிளையில் வைத்து வழங்கப்படும் முருங்கன் கிளையில் நகைகளை மீளப்பெறுவதக்குப் பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 3 ஆம் கிழமை வழங்கப்படும். மன்னார் நகைகள் மே மாதம் முதற் பகுதியில் வழங்கப்படும்.


இது சம்பந்தமான மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள விரும்புகின்ற வாடிக்கையாளர்கள் அந்தந்த வங்கி முகாமையாளர்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

# வடக்கு - கிழக்கு பிரச்சினை சிக்கலானது

## தீர்ப்பதற்கு விட்டுக்கொடுப்பு அவசியம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினை ஒரு சிக்கல் நிறைந்தது. சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும்



திருடத்யடையக்கூடிய முறையில் அப்பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படவேண்டும். அவை விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் தீர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு நேற்று பாராளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்துப் பேசிய ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார். மேலும் அவர் பேசுகையில்;

வடக்குக் கிழக்குப் பகுதிகளின் நிலைமைகள் பற்றி ஜனாதிபதி குறிப்பிடுகையில் அப்பகுதிகளில் தற்பொழுது நிலைமைகள்சீரடைந்துள்ளன என்றும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஜனநாயக அரசியல் நீரோட்டத்திற்கு திரும்பி இருக்கின்றார்களென்றும்கூறினார். பொதுத் தேர்தலின்போது அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய இந்திய அமைதிகாக்கும் படையை தாம் கடந்த மாதத்துடன் வாபஸ்பெறச் செய்துள்ளதாக எடுத்துரைத்தார். இது தொடர்பாக இந்தியப்பிரதமமந்திரி வி. பி. சிங் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியதற்காக ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் 1995ஆம் ஆண்டளவில் பத்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஜனசக்திதிட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

தொடர்ந்து பேசிய ஜனாதிபதி, நாட்டில் சுமூகநிலை ஏற்பட்டுள்ளது. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் நடைபெறுகின்றன. நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வேகத்துடன் செயற்படத் தொடங்கியுள்ளது.

மேலும் நாட்டில்சீர்குலைவுகள் ஏற்படாவிட்டால் அபிவிருத்தி இலக்குகளை அடைய முடியும். அறிமுகப்படுத்தப்படவுள்ள பாரிய உற்பத்தி அபிவிருத்தி திட்டமூலம் பல தொழில்வாய்ப்புக்கள் கிடைக்கும்.

வெளிநாடுகளிலும் பல இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவுள்ளது. இதற்கான பயிற்சித்திட்டமும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்காலத்தில் வேலை வாய்ப்புக்கள் தகைமை அடிப்படையிலும், இனவிகிதாசார அடிப்படையிலும் கிடைக்கும். காணிபகிர்ந்தளிக்கப்படுவதற்கும் இது பொருந்தும்.

இவ்வாண்டு எட்டுலட்சத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு சுமார் பத்துலட்சம் ஏக்கர் காணி வழங்கப்படவுள்ளது. இதனால் பல விவசாயிகள் நன்மை பெறுவர்.

# மூதூரில் அமைதியான பரீட்சை

கடந்த இருவருடங்களாக ஒழுங்கற்ற நிலையில் நடைபெற்றுவந்த ஜீ. சீ. ஈ. சாதாரணப் பரீட்சைகள் யாவும் இம்முறைமூதூரில் விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் மிகவும் ஒழுங்கான முறையில் நடைபெறுகின்றன.

இம்முறை ஒவ்வொரு பரீட்சை நிலையங்களுக்கும் அடிக்கடி விஜயம் செய்யும் விடுதலைப் புலிகளின் போராளிகள் பரீட்சாத்திகளைக் கடுமையாக எச்சரித்ததைத் தொடர்ந்தே பரீட்சார்த்திகளும் மேற்பார்வையாளர்களும் மிகவும் கவனமாக நடந்து கொண்டனர்.

எதிர்வரும் க.பொ. த.உயர்தரப்பரீட்சைகளும் புலிகளின் அனுசரணையுடன்இவ்வாறே நடைபெறவேண்டும் என்று பொதுமக்கள் அவாவுடன் இருக்கிறார்கள். (28)

## விடுதலைப் ...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் ஏற்றுக்கொள்ளாமல் மாசு கற்பிக்க முயன்றது.

இப்போராட்டத்திற்கு ஆதரவாக பல்வேறு மாணவர்கள் இணைந்து மார்ச் 11ஆம் திகதி நகரில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்வலம் அந்நிய படைகளால் தடுத்து நிறுத்தப்பட்டது.

14ஆம் திகதி பல்வேறு அமைப்புகள் ஆரையம்பதியிலிருந்து மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்வரை ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்வலம் மஞ்சந்தொடுவாய் முகாம் முன்பு கண்ணீர்புகை, குண்டாந்தடி பிரயோகம் செய்யப்பட்டு கலைக்கப்பட்டன.

17ஆம் திகதி பேச்சுவார்த்தைக்காக அழைக்கப்பட்ட அன்னையர் முன்னணி பிரமுகர்கள் தடுத்து வைக்கப்பட்டனர்,

அனறையதினம் பிள்ளைகள் தாயை காப்பாற்றுமாறு புகார் செய்தார்கள் என்று படுக்கையில் கிடந்த டேவிட் அன்னம்மாவை பலவந்தமாக தூக்கி சென்றனர் அந்நியப் படையினர்.

18ஆம் திகதி இந்திய படையினர், அதிகாரிகளின் மேற்படி செயலை கண்டிப்பதற்காக மாவட்டம் முழுவதும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்தியப் படையினர் ஊர்வலம் ஹர்த்தால் போன்ற சாத்வீக போராட்டங்களுக்கு தடைவிதித்தனர்.

அன்னையர் முன்னணியினர் தடையை மீறினர். டேவிட் அன்னம்மா இருந்த மேடையில் தமது கண்டனம் எதிர்

# பருத்தித்துறை இலங்கை வங்கி நிவாரணக் கொடுப்பனவுகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியில் இம்முறை சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய மூன்று நாட்களும் மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படுமென, பருத்தித்துறை இலங்கை வங்கி அறிவித்துள்ளது.

7 ஆம் திகதி சனிக்கிழமை பொலிகண்டி கிழக்கையும், செருடாவில் தெற்கையும் சேர்ந்த 1142 குடும்பங்கள் இரண்டாங்கட்ட மீளக்குடியமர்தல் நிவாரணத்தையும் இவ்விரு பகுதிகளையும் சேர்ந்த 15 குடும்பங்கள் மீளக்குடியமர்தல் நிவாரணம் 2000/- ரூபாவையும் பெற்றுக் கொள்கின்றனர்.

8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மந்திகையையும், கற்கோவளத்தையும் சேர்ந்த 1147 குடும்பங்கள் இரண்டாங்கட்ட மீளக்குடியமர்தல் நிவாரணத்தையும் மந்திகை, சுண்டிக்குளம் பகுதிகளைச்சேர்ந்த 12 குடும்பங்கள் மீளக்குடியமர்தல் நிவாரணம் 2000/- ரூபாவையும் பெற்றுக் கொள்கின்றனர்.

9 ஆம் திகதி திங்கட்கிழமை பருத்தித்துறை கிழக்கு, குடத்தனை கரையூர் பகுதிகளைச் சேர்ந்த 1337 குடுப்பங்கள் இரண்டாங்கட்ட மீளக்குடியமர்தல் நிவாரணத்தையும், பருத்தித்துறை கிழக்கைச் சேர்ந்த 24 குடும்பங்கள் மீளக்குடியமர்தல் நிவாரணம் 2000/- ரூபாவையும் பெற்றுக் கொள்கின்றனர். (25)

# சேற்றில் புதையுண்டு மரணமானார்

(சுதுமலை)

உடுவில் தெற்கு புதுமடத்தைச் சேர்ந்த சின்னப்பு தேவராசா(வயது43)என்பவர் இன்று காலை சுதுமலை அம்மன் ஆலயத்திற்கு அண்மையில் இருக்கும் கட்டுச்குளத்தில் நீராடச் சென்ற போது சேற்றில் புதையுண்டு நீரில் மூழ்கி மரணமானார்.

திருமணமாகாத இவரை மீட்க சுழியோடிகளின் உதவிகளுடன் சகல பிரயத்தனங்களும் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பலன் கிடைக்கவில்லை என்றும் பின்னர் சடலமாகவே மீட்கப்பட்டார் என்றும் அயலவர்கள் தெரிவிக்கின்றார்கள். (19)

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

# தபால் அலுவலங்கள் மூலம் ஓய்வூதியக் கொடுப்பனவுகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் ஓய்வூதிய கொடுப்பனவுகள் தபால் நிலையங்கள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஓய்வூதியம் பெறுவோர் தமக்கு வசதியான தபால் நிலயத்தை இம்மாதம் 30 ஆம் திகதி முன்பு அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

உப தபால் நிலையம் மூலம் உச்ச எல்லை நிர்ணயம் காரணமாக வழங்கமுடியாத ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக செயலக பிரதம கணக்காளர் திரு. வி எஸ். சங்கரப்பிள்ளை அறிவித்துள்ளார். (37)

# மாணவர்கள் சுற்றுலா!

(புங்குடுதீவு)

நீண்ட காலத்தின் பின்னர் புங்குடுதீவு மகாவித்தியாலய உயர் வகுப்பு மாணவர்கள் 'கல்விச் சுற்றிலா' ஒன்றை அடுத்த மாதம் 10ஆம் திகதி மேற்கொள்ளஉள்ளார்கள்.

# கடதாசிகூட்டுத்தாபனஊழியர்களுக்கு பயங்கரவாத ஊக்குவிப்பு அலவன்ஸ்

(மட்டக்களப்பு)

தேசிய கடதாசி கூட்டுத் ... காக 90 இலட்சம் ரூபா நிதி தேவை.

# தபால் சேவைகள் துரிதகதியில் நடைபெறுகின்றன!

(சுதுமலை)

யாழ். கோட்டை இரவு தபால் புகையிரத சேவையில் தபால் தரம் பிரிக்கும் வேலைகள் இன்று முதல் சீராக நடை... களில் தமது கடமைகளை திறம்பட செய்ய சீரான வசதிகள் செய்து தரப்பட்டிருப்பதாகவும் தாம் எவ்வித பீதி

இதன் பிரகாரம் ஓய்வூதியம் பெறுவோர் தமக்கு வசதியான தபால் நிலயத்தை இம் மாதம் 30 ஆம் திகதி முன்பு அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

உப தபால் நிலையம் மூலம் உச்ச எல்லை நிர்ணயம் காரணமாக வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந் நிலையால் வாழைச்சேனை, செங்கலடி, சல்குடா ஏறாவூர், மட்டக்களப்பு, கோட்டை முனை, காத்தான்குடி, களுவாஞ்சிகுடி, கல்லாறு, பெரியபோ தீவு ஆகிய தபால் நிலையங்கள் மூலம் வழங்க

## தொலைபேசி......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகத் தொலைபேசிக் கம்பிகளைத் திருடுவோரிடமிருந்து பழைய பித்தளை, செம்பு வியாபாரிகள் அவற்றைவாங்க வேண்டாமெனவும் கேட்கப்பட்டுள்ளனர்.

இனிமேல் வெட்டப்பட்ட இடங்களுக்குப் பொருத்துவதற்குப் புதிய கேபிள்கள் இல்லையெனவும், வெட்டப்பட்டால் திருத்தமுடியாத நிலை ஏற்படும் எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

## பாராளுமன்ற....

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

கலந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோஷலிஷ முன்னணி ஆகிய எம். பிக்கள் இதில் கலந்து கொள்ளாது பகிஷ்கரித்தனர்.

## சுற்றுலா!

(புங்குடுதீவு)

நீண்ட காலத்தின் பின்னர் புங்குடுதீவு மகாவித்தியாலய உயர் வகுப்பு மாணவர்கள் 'கல்விச் சுற்றிலா' ஒன்றை அடுத்த மாதம் 10ஆம் திகதி மேற்கொள்ளஉள்ளார்கள்.

சுன்னாகம் மின்நிலையம், காங்கேசன்துறை, துறைமுகம் காங்கேசன்துறை சீமெந்து ஆலை, கீரிமலை ஆகிய இடங்களைப் பார்வையிடுவதற்காகவே இச் சுற்றுலா மேற்கொள்ளப்படவுள்ளது.

## பிறட்மனின் .......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளின் ஜனத்தொகை அதிகரிப்பையும் ஒவ்வொரு நிமிடமும் அறிந்து கொள்ள முடியும். கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதியே இக் கருத்தரங்கு நிகழ்ந்தது அன்று மாலை 4.50 மணியளவில் பிறட்மன் அந்தக் கருவியை இயக்கியபோது உலக சனத் தொகை 52, 68, 489, 476 ஆகும். இதேவேளை இலங்கையின் சனத்தொகை 17,572677 என அக் கருவி காட்டியது.

பிறட்மன் இந்த நவீன கருவியைப் பற்றிக் குறிப்பிடுகையில், உலக சனத்தொகை ஒவ்வொரு நாட்டினதும் சனத் தொகை பற்றிய தகவல்கள் ஏற்கனவே இதில் பொதுவான அடிப்படையில் கம்பியூட்டர் முறையில் வழங்கப்பட்டுள்ளதாம் அந்தத்தரவுகளின் அடிப்படையில் எந்த நிமிடமும் உலக சனத்தொகையும் மற்ற நாடுகளின் சனத்தொகையையும் அறிய முடியும் என்று அவர் தெரிவித்தார்.

## வவுனியா....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாதிகள் என்று கூறப்படும் ஒரு முஸ்லிம் குழுவுக்கும் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட மோதல் துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது. இதில் மூவர் பலியானார்கள்.

இதனையடுத்தே அங்கு பதற்றம் நிலவுகிறதால் இஸ்லாம் மதத்தின் மரபைக் கடைப்பிடித்து வரும் முஸ்லிம்களின் குடும்பத் தலைவர்கள் அகதிகளாக வந்துள்ளனர். இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை சம்பவத்தில் படுகாயமடைந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்தில்லுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது

## கடதாசிகூட்டுத்தாபனஊழியர்களுக்கு பயங்கரவாத ஊக்குவிப்பு அலவன்ஸ்

(மட்டக்களப்பு)

தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்தின் வாழைச்சேனை ஆலை ஊழியர்களுக்கு, பயங்கரவாத ஊக்குவிப்பு அலவன்ஸ் 50 சதவீத கொடுப்பனவு இம்மாத சம்பளத்துடன் வழங்கப்படவுள்ளது.

மேற்படி அலவன்ஸ் 1989 ஜூலை - டிசம்பர் வரையிலான ஆறு மாத காலம் வழங்கப்பட வேண்டும். இதற்காக 90 இலட்சம் ரூபா நிதி தேவை.

திறைசேரி. புனர்வாழ்வு அமைச்சு, கைத்தொழில் அலுவல்கள் அமைச்சு மூலம் இந்நிதி பெற முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் பலனளிக்கவில்லை,

இந்நிலையில் கைத்தொழில் அமைச்சு, ஆலை நிர்வாகம் பெறும் இலாபத்தின் மூலம் வழங்க அனுமதியளித்துள்ளதையடுத்து ஏப்ரல், மே, ஜூன் மாத சம்பளங்களுடன் மூன்று கட்டங்களாக வழங்க ஆலை நிர்வாகம் முடிவு செய்துள்ளது. (37)

## புனரமைப்பு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுவதற்கான நடவடிகைக் எடுக்கப்பட்டுள்ளது. பெயர் பட்டியல் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

வங்கிக்கு கொடுப்பனவு சட்டளை கிடைத்தவுடன் நிவாரணம் வழங்குதல் ஆரம்பமாகும். இவ்வாறு அவர் தெரிவித்தார். (37)

## வவுனியா மக்கள்..-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் வங்கிக் கிளைகளில் ஊழியர் பற்றாக்குறை நிலவுவதாகவும், ஒருஊழியர்பல வேலைகளைச் செய்ய வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

## முதலாந்தர......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

இரண்டாம் தர அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவில்லை.

கடந்த ஆண்டு முதலாம், இரண்டாம், மூன்றாம் தர அதிபர் பதவிகளுக்கான எழுத்துப் பரீட்சை நடத்தப்பட்டன. (36)

## பாதிக்கப்பட்ட...-..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறும்.

அரசாங்க மற்றும் அரசாங்க சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொள்கின்றனர்.

## விவசாய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி )

யம், கடன் அடிப்படையில் வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு இது வரை 37 கிணறுகள் வெட்டிக் கொள்ள உதவி செய்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த மாவட்டதில் உள்ள ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களுக்கும் 5கிணறுகள் வீதம் 8 நிலையங்களின் கீழ் உள்ள விவசாயிகளுக்கும் கிணறு வெட்டிக்கொள்ள உதவியளித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

கிணறு ஒன்றிற்கு கடனாக ரூபா பதினைந்தாயிரமும் மானியமாக ரூபா பதினைந்தாயிரமும் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த அவர் மேலும் பணம் ஒதுக்கப்பட்டதன் பின்னர் பல கிணறுகள் இம் மாவட்டத்தில் அமைக்க உதவி செய்யப்படும் என்றும் தெரிவித்தார். (தி)

## நிர்வாக..-

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

சேவை உத்தியோகத்தர் தெரிவும் இடம்பெற நடவடிக்கை எடுக்குமாறு மேன்முறையீடு செய்திருந்தன.

இம் மேன்முறையீட்டிற்கு அண்மையில் உள் நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரை தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் கேட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலகத்தில் இருந்து பதில் வந்துள்ளது. (45)

## துரிதகதியில் நடைபெறுகின்றன!

(சுதுமலை)

யாழ். கோட்டை இரவு தபால் புகையிரத சேவையில் தபால் தரம் பிரிக்கும் வேலைகள் இன்று முதல் சீராக நடைபெறவிருக்கின்றது. இது பற்றி இன்று புகையிரத தபால் சேவைக்கு பொறுப்பாகவிருக்கும் திரு. வி. எஸ். வீரசிங்கம் தகவல் தருகையில் யாழ். குடாநாட்டில் இருந்து அனுப்பப்படும் சகல கடிதங்களும் உள்ளூர் சேவையை பொறுத்த மட்டில் மறுநாளே உரிய விலாசதாரர்களுக்கு கிடைத்துவிடும். அதுபோல வெளிநாடுகளுக்கான கடிதங்களும் விரைவாக சென்றடைய வழிவகுக்கப்பட்டிருக்கிறது என்றார்.

மேலும் இச்சேவையில் ஈடுபட்டிருக்கும் சிங்கள தபால் தரப் பிரிக்கும் ஊழியர்கள் ஈழநாதத்திற்கு தெரிவித்த தகவல்களின்படி தமக்கு வடபகுதி புகையிரத நிலையங்களில் தமது கடமைகளை திறம்பட செய்ய சீரான வசதிகள் செய்து தரப்பட்டிருப்பதாகவும் தாம் எவ்வித பீதியும் இன்றி தமது கடமைகளை சீராகச் செய்யக்கூடிய நல்ல சூழ்நிலை இருப்பதாகவும் தெரிவித்தார்கள். (19)

## யானை அட்டகாசம்

(1ஆம் பக்க தொடர்ச்சி)

சில தினங்களுக்குமுன் இச் சம்பவம் நடந்தது. யானையைக் கண்ட இளம் பெண் ஒருவர் அதிர்ச்சிகாரணமாக நடுங்கிக் கொண்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

இரவு வேளையில் மேற்படி கிராமத்திற்குள் நுழைந்த யானை வீட்டிலிருந்தவர்கள் ஓடியதன் பின் அவ்வீடுகளை சேதப்படுத்தி உள்ளது.

இதனால் வீடுகளுக்கும் அவற்றுக்குள் இருந்தபொருட்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சம்பவத்தில் பீ. கமலாதேவி (வயது 14) என்பவரே அதிர்ச்சியடைந்து நடுங்கிக்கொண்டிருக்கிறார்.

இது சம்பந்தமாக இப்பகுதி இராணுவ முகாமில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

## வவுனியா நகரில் இரவு படக்காட்சி

(வவுனியா)

வவுனியா நகரில் உள்ள திரையரங்குகளில் மீண்டும் இரவுக் காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன.

சுமார் ஐந்து வருடங்களின் பின் இரவுக்காட்சி இத்திரையரங்குகளில் காண்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (தி)

## நெடுந்தீவில் நிரந்தர உ-அ. அதிபர் இல்லை

(தீவுப்பகுதி)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு நிரந்தர உதவி அரசாங்க அதிபர், நீண்ட காலமாக நியமிக்கப்படவில்லை என மக்கள் புகார் தெரிவிக்கின்றார்கள். இந்த அலுவலகத்திற்கு நிரந்தர உதவி அரசாங்க அதிபர் ஒருவர் உடனடியாக நியமிக்கப்படவேண்டுமென்பதே நெடுந்தீவு மக்களின் உடனடிக் கோரிக்கையாகும். (13)

## தமிழீழ ....

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெருங்கிய தொடர்பு, பெண்களின் எண்ணங்களில் மறுமலர்ச்சி,சமதர்மசிந்தனைகள் ஆதியன தமிழ் மக்களிடையே பரவுமாயின் எமது விடுதலையும், அதன்பின் ஏற்படும் சுபீட்ச வாழ்வும் எம்மை விரைவில் வந்தடையும். இவ்வுண்மையை ஏற்று அனைத்து தமிழர்களும் புதிய சமுதாயத்தினைப் படைக்கும் பணிக்குத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

ந. சிவபாதம்
(புத்தொளி)
''செல்வகம்''
ஆனைகோட்டை.

இந்தியப் படையினர் ஊர்வலம் ஹர்த்தால் போன்ற சாத்வீக போராட்டங்களுக்கு தடைவிதித்தனர்.

அன்னையர் முன்னணியினர் தடையை மீறினர். டேவிட் அன்னம்மா இருந்த மேடையில் தமது கண்டனம் எதிர்ப்பு தெரிவிப்பதாக உறுப்பினர்கள் ஐவர் அன்றைய தினம் ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

திருமதி கே. ஒஸ்ரா, திருமதி ஜே. பவளராணி, திருமதி கே. பொன்னுத்துரை, திருமதி ஜீ. சொர்ணம்மா ஆகியோருடன் 5ஆவது பெண்மணிதான் அன்னை பூபதி கணபதிப்பிள்ளை.

நால்வரும் தமது ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ள அன்னை பூபதி தான் ''இலட்சியம், கோரிக்கை நிறைவு பெறும்வரை உண்ணாவிரதம் இருப்பேன்'' என உறுதி கொண்டார்.

கணவன், பிள்ளைகள் குடும்ப உறுப்பினர்கள் எவரும் குறுக்கீடு செய்யப் போவதில்லை என சமாதான நீதிபதி முன்னிலையில் சத்தியக் கடதாசி கொடுத்துவிட்டு மார்ச் 19இல் தன் சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தார் ஏப்ரல் 19இல் தன் இலட்சியம் நிறைவு பெறாத நிலையில் உயிர் தியாகம் மூலம் வீர சுவர்க்கம் அடைந்தார்.

தமிழ் மக்கள் அமைதியும் நல்வாழ்வுக்காகவும்உயிர்தியாகம் செய்த அன்னை பூபதியின் தியாகம் தமிழ் சமுதாயம் இருக்கும் வரை மறக்க முடியாது.

அன்னை பூபதி இன்று சர்வதேச ரீதியில் மறக்க முடியாத இடத்திலுள்ளார்.

சாத்விகத்தின் அன்னையாக விளங்குகிறார். (37)